

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2021

சுற்றாடல் அமைச்சு

சுற்றாடல் அமைச்சு

கௌரவ மஹிந்த அமரவீர
கௌரவ அமைச்சர்

அமைச்சின் பிரதான அலுவலர்கள்

வைத்தியர் அனில் ஜாசிங்க
செயலாளர்

திரு.ஆர்.ஏ.ஆர்.ஆர் ரூபசிங்க
மேலதிகச் செயலாளர் - நிருவாகம்

டப்.ஜீ.டப்.எம்.டப்.ரீ.பி. திசாநாயக்க
மேலதிகச் செயலாளர் - சுற்றாடல் கொள்கை

டப்.டீ.எஸ்.சீ.வெலிவத்தை
மேலதிகச் செயலாளர் - இயற்கை வளங்கள்

திரு.பீ.முதலிகே
பணிப்பாளர் நாயகம் - திட்டமிடல

ஏ.எச்.எல்.டீ.காமிணீ விஜேசிங்க
மேலதிகச் செயலாளர் - சுற்றாடல் கருத்திட்டம் கல்விப் பயிற்சி

ஆர்.டீ.எஸ். ஜயதுங்க
மேலதிகச் செயலாளர் - சுற்றாடல்அபிவிருத்தி

திருமதி சுனேத்திரா பத்திரன
பிரதம நிதி அலுவலர்

அமைச்சுக்கு உரிய அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள

மத்திய சுற்றாடல் அதிகார சபை	- திரு.எஸ்.அமரசிங்க, தலைவர்
	- திரு.பீ.பி.ஹேமந்த ஜயசிங்க, பணிப்பாளர் நாயகம்.
புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்கப் பணியகம	- திரு.அநுர வல்பொல, தலைவர்
	- திரு.பொறி.சன்ஜன த சில்வா, பணிப்பாளர் நாயகம்.
வரையறுக்கப்பட்ட புளுஆடீ தொழிநுட்ப சேவை தனியார் கம்பனி	- திரு.ஆர்.எம்.எஸ். பிரியந்த குமார ரத்நாயக்க பிரதம நிறைவேற்று அலுவலர்
இலங்கை கிளைமட் பண்ட் பிரைவட் லிமிடட்	- திரு.ஜீ.ஏ.எம்.சீ. ஆரியதிலக்க பிரதம நிறைவேற்று அலுவலர்

உள்ளடக்கம் **ப.இல**

1.		**முதலாவது பகுதி**	
	1.1	அறிமுகம்	01
	1.2	அமைச்சின் தூரநோக்கு, பணிக் கூற்று, குறிக்கோள்கள	02
	1.3	பிராதான செயற்பாடுகள்	03
	1.4	நிறுவன விளக்கப்படம்	04
	1.5	அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்	05
	1.6	அமைச்சின் கீழ் உள்ள நிதியங்கள்	05
	1.7	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரங்கள்	05
2.		**இரண்டாம் பகுதி - முன்னேற்றம்**	09
	2.1	சுற்றாடல் அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட	09
	2.1.1	சுற்றாடல் கொள்கைகளின் பகுப்பாய்வு மற்றும் அமுலாக்கல் திட்டங்கள்.	09
	2.1.2	இலங்கையின் உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பு	10
	2.1.3	காலநிலை மாற்ற சவால்கள் வெற்றி கொள்ளல்	11
	2.1.4	வாயு வளங்கள் முகாமைத்துவம்	13
	2.1.5	சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்	14
	2.1.6	சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம்.	15
	2.1.7	நில வளங்கள் பாதுகாப்பு	16
	2.1.8	சுற்றாடல் கல்வி மற்றும் அறிவுறுத்தல்	17
	2.1.9	சர்வதேச சுற்றாடல் உறவுகள்	20
	2.1.10	சுற்றாடல் தினக் கொண்டாட்டங்கள்	22
	2.1.11	ஆறுகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித் திட்டம்"	23
	2.1.12	சுவாசம் தரும் மரங்கள் தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்.	24
	2.1.13	நிறுவன அலுவல்கள்	25
	2.1.14	உள்ளகக் கணக்காய்வு	25
	2.1.15	சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள்,	25
	2.1.16	சட்ட அலுவல்கள்	25
	2.2	சுற்றாடல் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின்	26
	2.2.1	சுற்றாடல் உணர் திறன்மிக்க இடங்களில் (ESA) உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமைச் சேவைகள் பராமரிப்புச் செயற்றிட்டம்	26
	2.2.2	பொலிகலொரினேடட் பயிபினயில் கழிவுகள் மற்றும் பொலிக்லொரினேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்கள் ஆகியவற்றைச் சுற்றாடல் நட்புறவான	27
	2.2.3	மினமாட்டா உடன்படிக்கையின் கீழ் " இரசம் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை "	28
	2.2.4	உலக சுற்றாடல் வசதிகளின் கீழுள்ள ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான உடன்படிக்கைக்குரிய தேசிய அறிக்கையிடல் செயற்பாடுகள்.	28
	2.2.5	மத்திய மத்திய மலை நாட்டில் மண்ணரிப்புக்கு உட்பட்ட விவசாய நிலங்களைப் புனரமைக்கும் செயற்றிட்டம்	29
	2.2.6	இலங்கையில் மொன்ரியல் அமைப்பின் ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.	30
	2.2.7	காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கான பங்குடமைக் கருத்திட்டம்.	31

	2.2.8	இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் பயன்பாட்டின் பின்னர் வீசப்படுகின்ற விவசாய இரசாயனப் பொதிகளை மீள்சுழற்சி செய்தல் கருத்திட்டம்.	32
	2.2.9	இலங்கையில் நிலைபேறானதும் வினைத்திறனானதுமான மின்சார இடப்பெயர்வு முறையை)Electric Mobility) மேம்படுத்தல் தொடர்பான செயற்றிட்ட முன்மொழிவைத் தயாரித்தல்.	32
	2.2.10	இலங்கையின் வளித் தரத்தைப் பேணுதகு நிலையாக்கல் : கொவிட்- 19 காலப்பகுதியின் போது செயற்படுத்துவதற்கான . 25 படி முறைகள் கொண்ட செயற்றிட்டம்	32
	2.2.11	சமூக அடிப்படைச் சூழல் அணுகுமுறை மூலம் வனங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியன ஒருங்கிணைந்த முகாமைத்துவச் செயற்றிட்டம்.	33
	2.2.12	உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டஜீனா உடன்படிக்கைக்கு உட்பட்டதாக தேசிய உயிர்பாதுகாப்பு சட்கத்தை செயற்படுத்தல்	35
	2.3	அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் முன்னேற்றம்.	36
	2.3.1	மத்திய சுற்றாடல் அதிகாரசபை	36
	2.3.2	புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம்	41
	2.3.3	வரையறுக்கப்பட்ட ஜீ எஸ் எம் பி டெக்னிகல் சேர்விஸ் (தனி) கம்பனி	45
	2.3.4	இலங்கை காலநிலை நிதியம் (பிரைவட்) லிமிடட்	48
3.		மூன்றாம் அத்தியாயம்	50
	3.1	நிதிச் செயலாற்றுகைக் கூற்று	50
	3.3	நிதி நிலைமைக் கூற்று	52
	3.4	பணப்பாய்ச்சல் கூற்று	53
	3.5	நிதி வெளிப்படுத்துகைக் குறிப்பு	54
	3.6	வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை	54
	3.7	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தும் செயலாற்றுகை	55
	3.8	நி. ஒ. 208 பிரகாரம், வேறு அமைச்சுக்கள்.˙. திணைக்களங்களின்˙ பிர-திநிதியாக இந்த திணைக்களத்திற்கு.˙. மாவட்ட செயலாளர் காரியாலயத்துக்கு.˙. மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட ஒதுக்கீடுகள்	55
	3.9	நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை	55
	3.10	கணக்காய்வாளரின் அறிக்கை	56
4.		நான்காம் அத்தியாயம்	68
	4.1	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்	68
5.		ஐந்தாம் அத்தியாயம	68
	5.1	இனங்காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள்	68
	5.2	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வற்கான வெற்றிகளும் சவால்களும்	70
6.		ஆறாம் அத்தியாயம - மனித வள விவரம்	70
	6.1	பதவியணியினர் முகாமைத்துவம்	70
	6.2	நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனித வளப் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது	70
	6.3	மனித வள விபரம்	71
7.		ஏழாம் அத்தியாயம் – இணக்க அறிக்கை	73

01 அத்தியாயம் -

1.1 அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட 2187/27 ஆம் இலக்க 2020.08.09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2196/27 ஆம் இலக்க 2020.10.06 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் " சுற்றாடல் அமைச்சு" தாபிக்கப்பட்டது. இந்த அமைச்சுக்கு நிலைபேறான அபிவிருத்தி இலங்கையின் உயிரியற் பல்வகைமை மற்றும் இயற்கை அழகைப் பாதுகாத்துக் கொண்டு இயற்கை வளங்கள் பயன்படுத்தல் மற்றும் காடுகள், மரங்கள், கரையோ-ரங்கள், ஈர நிலங்கள், கால்வாய்கள், ஆறுகள், வன உயிர்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், குப்பைகளைத் தவிர்த்தல் மற்றும் அகற்றல், தூய்மையான வதிவிட சுற்றாடல் மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு பொருந்தக் கூடியவாறு சுற்றாடல் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரியதாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது சுற்றாடல் அமைச்சர் பதவியை கௌரவ மஹிந்த அமரவீர அவர்கள் வகித்து வருகின்றார்கள்.

" சுபீட்சத்தின் நோக்கு " புதிய அரசின் கொள்கைப் பிரகடனத்திற்கு ,சைவாகவும் மற்றும் அரசினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ள " நிலைபேறான சுற்றாடலொன்றை " உருவாக்குவதற்காக சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு ,சைவானதாக சுற்றாடல் விடயத்திற்குரிய கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவு செலவுத் திட்டம், அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை ஆமற்கொள்ளல் ஆகிய முதன்மைப் பணிகளுக்காக சுற்றாடல் அமைச்சு தலைமைத்துவம் வழங்குகின்றது.

மேலும்,

1. நிலைபேறான சுற்றாடல் எண்ணக்கரு, பாடசாலைக் கல்வி தொடக்கம் மக்கள் மத்தியில் அனுகுமுறை வகையில் மீளமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

2.சுற்றாடல் சார்ந்த அனுமதிப்பத்திரம் வழங்கும் வழிமுறையை மீளாய்வுக்கு உட்படுத்தி சுற்றுசூழல் நட்பான மற்றும் மக்கள் நட்புறவானவாறு மேற்படி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை எளிமையாக்குதல்.

3.சுற்றாடல் நட்புறவான உற்பத்தி, விநியோகம், போக்குவரத்துச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மற்றும் பொருளாதார வலய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வியபாபர மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் சமநிலைப் படுத்தல்.

4. சுற்றாடல் பாதுகாப்புக்காக நவீன அபிவிருத்தி தொழில்நுட்ப வழிமுறைகளை அறிமுகப்படுத்தல்.

ஆகிய விசேட முதன்மைகளூடாக சுற்றுசூழல் நட்புறவான மக்கள் சேவையொன்றை வழங்குதல் முதன்மைப்பணியாகும்.



அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை, புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், வரையறுக்கப்பட்ட புளுஆடீ தொழில்நுட்ப சேவைகள் தனியார் கம்பனி மற்றும் இலங்கை கிளைமட் பண்ட் பிரைவட் (லிமிடெட்) ஆகிய நிறுவனங்களுடன் சுற்றாடல் சுற்றாடல் அமைச்சு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை வேகமடைவதற்கும், மக்களின் வாழ்க்கை முறைமை மாறுவதும், காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்காக மொத்த அரச பொறிமுறையும் நிறுவன, சட்ட ரீதியான மற்றும் தொழில்நுட்ப சட்டகத்தை வலுவாக்கம் செய்துகொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிலைபேறாக மற்றும் சிக்கனமாகக கட்டியெழுப்புவதற்காக விசேட பணியொன்றை ஆற்றுகின்றது.

இந்த அறிக்கை மூலம் சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்கள், அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்கள் மூலம் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புப் பணிகள்தொடர்பான விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்று

அமைச்சின் நோக்கு

“நிலைபேறாக பிவிருத்தியடைந்த இலங்கை”

அமைச்சின் பணிக்கூற்று

நிலைபேறான இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தினூடாக சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு பேண்தகு சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக தலைமைத்துவம் வழங்குதல்.

1.3 சுற்றாடல் அமைச்சின் பிரதான பணிகள்: :

⇒ நிலைபேறான அபிவிருத்திக் கொள்கைகளை வகுப்பதற்காக உபயோகப்படுத்திக் கொள்வதற்காக பங்குதாரத் தரப்பினர்களின் பங்களிப்புடன் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறையில் உள்ள பிரச்சனைகளை அடையாளம் காணுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்புத் தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்காக பங்குதாரத் தரப்பினர்களிற்கு அறிவித்தல் மற்றும் செயற்படுவதை உறுதிப்படுத்தல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுக்கு ,சைவுடைய கொள்கைகளை செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மூலோபாயங்கள் மற்றும் அமுலாக்கல் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முன்னோடிக் கருத்திட்டத்தை மேற்கொள்ளல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுக்குரிய கொள்கை ரீதியான மறுசீரமைப்பு மற்றும் நிலைபேறான சுற்றாடல் எண்ணக்கரு மற்றும் ஏனைய பிரதான சுற்றாடல் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் மக்கள் அறிவூட்டல்.


⇒ இலங்கை கைச்சாத்திட்டுள்ள பல் தரப்பு சுற்றாடல் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப இலங்கையினால் ஆற்றப்பட வேண்டிய சர்வதேசப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தல்.

⇒ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறைக்குரிய பின்னாய்வு வழிமுறையைத் தயாரித்தல் மற்றும் பின்னாய்வின் மூலம் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக பொருத்தமான உத்திகளை பயன்படுத்தல்

⇒ கொள்கைகளை மேற்கொள்ளும் போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் பற்றிய ஆய்வு நடாத்துதல், அந்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அந்த தகவல்களை பொதுமக்களுக்கு உள்ளிட்ட உரிய பிரிவுகளுக்கு அனுப்புதல்.

⇒ சிறந்த சுற்றாடல் முகாமைத்துவமொன்றுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற பிரிவுகள் மற்றும் பொதுமக்களின் அர்ப்பணிப்புக்காக பொருத்தமதான சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்கும்

1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம் - சுற்றாடல் அமைச்சு



1.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் ∴ நிறுவனங்கள் :

- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம்
- வரையறுக்கப்பட்ட புளுஆடீ தொழிநுட்ப சேவை
- இலங்கை கிளைமட் பண்ட் (பிரைவட்) லிமிடட்

1.6 அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனத்தின் கீழ் காணப்படுகின்ற நிதியம் - ,ல்லை

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கப்பெறுகின்ற கருத்திட்டங்களின் தகவல்கள் (,ருப்பின்)

அ) கருத்திட்டத்தின் பெயர்	1. சுற்றாடல் உணர் திறன்மிக்க நிலப் பிரதேசங்களில் உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமைச் சேவைகள் பராமரித்தல் செயற்றிட்டம்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் UNDP
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா387.30
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2015-2021
அ) கருத்திட்டத்தின் பெயர்	2. பொலிகலொரினேடட் பயிபினயில் கழிவுகள் மற்றும் பொலிக்லொரினேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்கள் ஆகியவற்றைச் சுற்றாடல் நட்புறவான விதத்தில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் வெளியேற்றல் கருத்திட்டம்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	ஐக்கிய நாடுகள் தொழிநுட்ப அபிவிருத்தி அமைப்பு UNIDO
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 685.10
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2016-2022
அ) கருத்திட்டத்தின் பெயர்	3. மினமாட்டா உடன்படிக்கையின் கீழ் " இரசம் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை " தொடர்பான கருத்திட்டம்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	ஐக்கிய நாடுகள் தொழிநுட்ப அபிவிருத்தி அமைப்பு UNIDO
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 12
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2016 –2022
அ) கருத்திட்டத்தின் பெயர்	4. மண்ணரிப்புக்கு உட்பட்ட விவசாய நிலங்களைப் புனரமைக்கும் கருத்திட்டம்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உணவு விவசாய அமைப்பு FAO
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 227
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2016-2021

அ) கருத்திட்டத்தின் பெயர்	5. இலங்கையில் மொன்ரியல் அமைப்பின் ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	பல் தரப்பு நிதியம் MLF
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 30
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	வருடாந்த நிகழ்ச்சித்திட்டம்.
அ) கருத்திட்டத்தின் பெயர்	6. காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கான பங்குடமைக் கருத்திட்டம்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உலக வங்கி WB
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	அ.டொலர் மில் 1.8
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2020—2021
அ) கருத்திட்டத்தின் பெயர்	7.ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான உடன்படிக்கையின் அறிக்கையிடல் கருத்திட்டம்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான உடன்படிக்கையின் செயலகம்
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா11.5
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2019-2022
அ) கருத்திட்டத்தின் பெயர்	8. உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டஜீனா உடன்படிக்கைக்கு உட்பட்டதாக தேசிய உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான பணிச் சட்கத்தை செயற்படுத்தல் கருத்திட்டம்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உணவு விவசாய அமைப்பு FAO
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	அ.டொலர் 2,365"964
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2016—2022
அ) கருத்திட்டத்தின் பெயர்	9. சமூக அடிப்படை சுற்றாடல் முறைமை அணுகுக முறையூடான, விவசாய மற்றும் சுற்றாடல் துறை ஒன்றிணைந்த முகாமைத்துவ கருத்திட்டம்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 635.9
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021 - 2024

அ) கருத்திட்டத்தின் பெயர்	10. சுற்றாடல் மற்றும் சமூக அடிப்படையில் உணர் திறன்மிக்க விவசாய சுற்றாடல் முறைமையை தாபித்தல் ஊடாக நிலம் அழிவடைவதனை குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தி ஆரோக்கியமான விவசாயிகள் மற்றும்செழிப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கருத்திட்டம்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உலகலாவிய சுற்றாடல் வசதிகள் (GEF)
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 383
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021 - 2023
அ) கருத்திட்டத்தின் பெயர்	11. கடல் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண் பிளாஸ்ரிக், பிளாஸ்ரிக் கழிவுப்பொருட்கள் சுற்றாடல் நட்புறவான அடிப்டையில் முகாமைத்துவம்செய்தல் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுப்பொருட்கள் உருவாக்கத்தைக் தவிர்த்தல் மற்றும் குறைத்தல்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	அபிவிருத்து ஒத்துழைப்புக்கான நோர்வே முகவர் நிறுவனம் (NORAD)
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 10.37
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021 - 2022
அ) கருத்திட்டத்தின் பெயர்	12. ஆசிய பசுபிக் நாடுகளில் ஒரு முறை மாத்திரம் பயன்படுத்திய பின்னர் வீசப்படுகின்ற பிளாஸ்ரிக் மற்றும் அதன் கழிவுப் பொருட்களை சுற்றாடல் நட்புறவான வாறு முகாமைத்துவம் செய்தல் தொடர்பான திறன் விருத்தி.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	அபிவிருத்து ஒத்துழைப்புக்கான நோர்வே முகவர் நிறுவனம் (NORAD)
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 5.4
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021 - 2023
அ) கருத்திட்டத்தின் பெயர்	13. இரசம் உள்ளடங்கிய மற்றும் இரசம் கலந்த கழிவுப்பொருட்களை குறைப்பதற்கான தேசிய திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	மினமாட்டா மாநாட்டின் விசேட சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் .
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 32.15
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021 - 2023
அ) கருத்திட்டத்தின் பெயர்	14. இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் பயன்பாட்டின் பின்னர் வீசப்படுகின்ற விவசாய இரசாயனப் பொதிகளை மீள்சுழற்சி செய்தல் கருத்திட்டம்.
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	உலக சுகாதார தாபனம்
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 2.585
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021

அ) கருத்திட்டத்தின் பெயர்	15. கல்லீரல் புற்றுநோய் நிலைமை பற்றி விசேட கவனம் செலுத்தி கல்லீரல் பாதுகாப்பு சிகிச்சை முறையொன்றாக இரசம் அடங்கிய "லோகநாதரச" மருந்துப் பாவனை தொடர்பான ஆய்வு
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்	சுவிட்சர்லாந்து அரசு
இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு	மில்லியன் ரூபா 4.81
ஈ) கருத்திட்டத்தின் காலப்பகுதி	2021 - 2022

அத்தியாயம் 02 - முன்னேற்றம்

2.1 சுற்றாடல் அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம

2.1.1 சுற்றாடல் கொள்கைகளின் பகுப்பாய்வு மற்றும் அமுலாக்கல் திட்டங்கள்.

தேசிய சுற்றாடல் கொள்கை

2003 வருடத்தில் தேசிய சுற்றாடல் கொள்கை மற்றும் மூலோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் உள்நாட்டில் போன்று உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலம் உருவாகியுள்ள புதிய சுற்றாடல். சவால்களை வெற்றிகொள்வதற்கு இக்கொள்கையை இற்றைப்படுத்துவதன் அவசியம் ஏற்பட்டுள்ளது இவற்றின் பின்னணியில், நாட்டை கட்டியெழுப்பம் - சுபீட்சத்தின் நோக்கு சுற்றாடல் முகாமைத்துவத்தின் மாற்றமடைகின்ற முன்னுரிமைகள் புதிய சவால்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தேசிய கொள்கைகளை அறிமுகப்படுத்துதலுடன் கொள்கைகளில் குறிகாட்டி மாற்றம் ஆகிய விடயங்களை தோற்று வித்து சுற்றாடல் அமைச்சு ஏனைய பங்குதார நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் கொள்கை இற்றைப்படுத்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு தற்போது இறுதி வரைவு பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

சுற்றாடல் உணர்திறன் கொண்ட பிரதேசக் கொள்கை

பாகாப்புப் பிரேதசங்களிற்கு அப்பால் உயிரியல் பல்வகைமை, சுற்றாடல் முறைமை சேவைகள் மற்றும் காலநிலை மாற்றங்களுக்குப் தாக்குப்பிடிக்கும் திறனை வழங்குகின்ற சுற்றாடல் உணர்திறனான பிரதேசங்களில் முறையற்ற மனித நடவடிக்கைகளினால் சுற்றாடல் முறைமைகளுக்கு ஏற்படுகின்ற
சேதங்களைக் குறைத்தல், அவற்றைப் பாதுகாத்தல், நிலையான அடிப்படையில் சுற்றுச்சூழல் முறைமைகளை அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும்,

மூலோபாய அணுகுமுறையொன்றாக சுற்றாடல் உணர்நிலை பிரதேசங்கள் பற்றிய தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டது அரச துறை, தனியார் துறை, சமூகம் மற்றும் நிபுணர்கள் ஆகிய அனைத்து தரப்பினரினதும் கருத்துக்களையும், பிரேரணைகளையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட சுற்றாடல் உணர்திறன் கொண்ட பிரதேசங்களுக்கான தேசிய கொள்கை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

தேசிய சுற்றாடல் அமுலாக்கல் திட்டம்

சுற்றாடல் அமைச்சினால் 2021- 2030 காலப் பிரிவிற்கான தேசிய சுற்றாடல் அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு இது தேசிய சுற்றாடல் கொள்கைக்கு ஏற்ப மூலோபாயங்களையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் உள்ளடக்கிய வழிநடாத்தல் செயற்பாட்டுத் திட்டமாகும். சுற்றாடல் திட்டமிடல் இடவளியை நிவர்த்தி செய்யும் போது, ஐக்கிய நாடுகள் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் எஸ்.டி.ஜிஎஸ் (SDGs) மற்றும் தொடர்புடைய நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் போது 21 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சுற்றாடல் சவால்களை உள்ளடக்குகின்ற புதிய ஒன்பது தொனிப்பொருட்களை இது உள்ளடக்கியுள்ளது.பங்குதாரர்களுடன் உள்ளகக் கலந்துரையாடல்
தேசிய சுற்றாடல் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் செல்லுபடியானதாக்கும் கூட்டங்கள் நடாத்தப்பட்டு தேசிய சுற்றாடல்

சூழல் சவால்களை உள்ளடக்கும் தொனிப் பொருட்கள்
1. வளித் தர முகாமைத்துவம்.
2. உயிரியல் பல்வகைமைத் தன்மைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு
3. நிலைபேறான தன்மைக்கான காலநிலை நடவடிக்கைகள்.
4.கரையோர மற்றும் கடல் வளங்களை நிலைபேறானவாறு பயன்படுத்துதல்.
5. நிலைபேறான காணி வளங்கள் முகாமைத்துவம்.
6. மொத்தக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம்
7. இணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவம்.
8.நகர சபை மனித குடியேற்றங்களின் சுற்றாடல் முகாமைத்துவம்.
9.பசுமைக் கைத்தொழில்

அமுலாக்கல் திட்டம் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

கண்டல் தொடர்பான மூலோபாய ரீதியான அமுலாக்கல் திட்டம்.

.
கண்டல் தாவர சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பான தேசிய கொள்கை, அத்தகைய கொள்கையின் பேண்தகு தன்மை மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு.பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் காணி பயன்பாடு மாற்றங்கள் மற்றும் நிலையான வளங்கள் பிரித்தெடுத்தல் மற்றும் மீள்கட்டமைப்பு ஆகியவற்றுக்கான விதிகளுக்கு ஏற்ப. மூலோபாய ரீதியான அமுலாக்கல் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.

" பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய அமுலாக்கல் திட்டம் 2021-2030"

Global Environmental Strategies (IGES)/Centre for Collaborating with UNEP on Environmental Technologies (CCET) . நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் இரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. பிளாஸ்ரிக் இன் முறையற்ற பாவனை மற்றும் பிளாஸ்ரிக் நீண்டகால அழிவுறுநிலை மற்றும் உற்பத்திப் பொருட்களின் மூலமான நுண்ணிய பிளாஸ்ரிக் மூலம் சுற்றாடல் மற்றும் மனித சுகாதாரத்திற்கு ஏற்படுத்துகின்ற.பாரதூரமான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இச்செயற்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தேசிய பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்திக் கொள்கையை அமுல்படுத்தல்.

தேசிய சுற்றாடல் செயற்பாட்டுத் திட்டத்திற்கான தேசிய நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்கி தேசிய நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டன.

.

உயிரியல் பல்வகைமை மற்றும் தொடர்புடைய சம்பிரதாய அறிவு மற்றும் பிரயோகம் தொடர்பான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாயம்.


2021.04.07 ஆம் திகதி தொடர்புடைய பங்குதார நிறுவனங்களை இணைத்துக் கொண்டு வெளியிடப்பட்டது.

பசுமைப் பெறுகை தேசிய கொள்கை மூலம் சுற்றாடல் தாக்கங்களைக் குறைக்கின்ற பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளைத் தெரிவு செய்து கம்பனியொன்றினால் அல்லது அமைப்பொன்றினால் தமது உற்பத்திகளின் உற்பத்திச் சக்கரத்தின் பல்வேறுபட்ட கட்டங்களில் ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன் இதற்காகப் பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக 2021.12.15 ஆம் திகதி நடவடிக்கையெடுக்கப்பட்டது.

2.1.2 இலங்கையின் உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பு

தாவரங்கள் பற்றிய தேசிய சிவப்புத் தரவுப் பட்டியல் -. 2020 மற்றும் நன்னீர் மீன் இனங்கள் தொடர்பான தேசிய சிவப்பு தரவுப் பட்டியல் மதிப்பீட்டு - 2020 ஆம் ஆண்டில் வெளியிடல்.

தாவரங்கள் தொடர்பான தேசிய சிவப்புத் தரவுச் சான்றிதழ் - 2020 இல் இலங்கையில் தாவர இனங்களில், விசேடமாக பூக்கும் தாவரங்கள் மற்றும் பூக்காத தாவரங்கள் தாவரங்களின் தேசிய பாதுகாப்பு நிலைமை மற்றும் அதற்கு மேலதிகமாக பரினாம வளர்ச்சி குன்றிய தாவரங்களான (எல்கீ, லைக்கன, பிரயோபயிட்) மற்றும் இலங்கையின் பங்கசுகளின் (பூஞ்சைகளின்) பட்டியலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.




இந்த நூல் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் தேசிய தாவரவியற் கூடத்தின் உதவியுடன் உயிரியல் பல்வகமைப் பிரிவினால் தயாரிக்கப்பட்டது. 2020 - நன்னீர் மீன்கள் தொடர்பான தேசிய சிவப்புத் தரவுப் பட்டியல் மதிப்பீட்டின் போது 97 வகை நன்னீர் மீன் வகைகளுக்காக IUCN சிவப்புப் பட்டியல் நியமங்களுக்கமைய பாதுகாப்பு நிலைமைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இந்த இரண்டு பிரசுரங்களும் 2021 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர அமைச்சரினதும் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அணில் ஜாசிங்ஹ அவர்களினதும் தலைமையில் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் பங்கேற்புடன் வெளியிடப்பட்டது.

தேசிய சிவப்புத் தரவுப் பதிவேடு - இலங்கையின் பறவைக்களின் பாதுகாப்பு நிலைமை தொடர்பான மதிப்பீடு 2021

தேசிய சிவப்பு தரவுப் பதிவேட்டை இற்றைப்படுத்தும் போது
பவைகள் தொடர்பான நிபுணர் குழுவின் தொழில்நுட்ப உதவியுடன் உயிரியல் பல்வகைமைப் பிரிவினால் இந்த நூல் தயாரிக்கப்பட்டது. இலங்கையில் பறவை இனங்களின் பல்வகைமை, தனித்துவம் மற்றும் வாழிடங்களைப் பாதுகாக்கும் போதும் மற்றும் நாட்டின் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரிக்கும் போதும் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

“Flower Visiting Fauna of Sri Lanka மகரந்தக் காவுகை பட்டியல் வெளியீடு

“Flower Visiting Fauna of Sri Lanka – An Inventory of Pollinators” உயிரியல் பல் வகைமை பிரிவினால் தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.



அருவக்காரு பிரதேசம் முழுவதும் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு

அருவக்காடு பிரதேசத்தில் பண்டைய உயிரியல் பல்வகைமைப் பெறுமதியுடைய 3 இடங்கள் (மெனும் குலுனு, அலிவல மற்றும் பெரணி வெடிபிட்டிய) தொல்பொருட்கள் சட்டத்தின் கீழ் “தொல்பொருட்கள் காப்பிடமாக” 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

"இலங்கையின் கண்டல் தாவர (சதுப்புநில) சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு"

கண்டல் தாவர (சதுப்புநிலப்) பாதுகாப்பு மற்றும் அழிடைந்த சதுப்புநிலச் சுற்றாடல் முறைமையை மறுசீரமைப்பதற்கு வழிகாட்டுகின்ற 3 ஆராய்ச்சிகளுக்காக ரஜரட்ட மற்றும் றுஹுணு பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டப்பின் கல்வி நிறுவனத்திற்கு நிதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கணடல் தாவர (சதுப்புநிலப்) பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு குறித்த தேசிய அறிஞர்களின் குழுவின் மற்றும் இலங்கையின் சதுப்புநிலச் சுற்றாடல் முறைமை மறசீரமைப்புக்கான செயலாற்றுகை படையணியின் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

அவுஸ்திரேலியாவில் அமையப்பெற்றுள்ள பொதுநலவாய நாடுகளின் விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கண்டல் தாவரங்களின் காபன் ஒதுக்கை மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் அது தொடர்பில் ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து புத்தளம் மாவட்டத்தின் வண்ணாத்தவில்லு, புதுகம ஒதுக்கு வனம் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இரண்டு (02) ஹெக்டயார் நிலப்பரப்பில் கண்டல் தாவரங்களைப் பாதுகாப்பதற்காகப் சமுதாயத்தை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் நாயகம் அவர்களால் அங்குரார்ப்பணம் அரிய மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள கண்டல் தாவரங்களுக்கான நாற்றுமேடை தயாரித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பில் பாதுகாப்புத் திணைக்கள அலுவலர்களுக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

2.1.3 காலநிலை மாற்ற சவால்கள் வெற்றி கொள்ளல்

தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பை (NDCs) இற்றைப்படுத்தல்.

2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் இற்றைப்படுத்தப்பட்டதோடு 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம்
தொடர்பான அட்டவணைப்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு முன்வைக்கப்பட்டது.

பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான மின்சக்தி, போக்குவரத்து, கைத்தொழில், கழிவுப்பொருட்கள், விவசாயம், கால்நடை மற்றும் வனங்கள் ஆகிய துறைகளும், காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்காக விவசாயம், கால்நடை, மீன்பிடி, நீர் வளங்கள், நீர்ப்பாசனம், சுகாதாரம், கரையோரம் மற்றும் கடல்சார் வளங்கள், சுற்றுலா, உயிரியல் பல்வகைத்தன்மை, நகரத் திட்டமிடல் மற்றும் மனித குடியேற்றம் ஆகிய துறைகளும், காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற அனர்த்தங்களின் மூலம் ஏற்படுகின்ற இழப்புகள் மற்றும் நட்டங்கள் ஆகிய துறைகளும் உள்ளடக்கப்பட்டன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றி என்ற அடிப்டையில் மேற்கூறப்பட்ட தேசிய ரீதியில் தீர்மாணிக்கப்பட்ட பங்களிப்புக்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி வழங்கல்,கொள்திறனை (இயலளவைக்) கட்டியெழுப்புதல், தொழில்நுட்பக் பரிமாற்றம்.போன்ற விடயங்கள் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற முறையின் கீழ் உள்ளடக்கப்பட்டது. தொடர்புடைய துறைகளுக்கான நடவடிக்கைகள் மற்றும் பின்தொடர் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் குழுக்களை நிறுவுவதற்கான தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தற்போதைய முறைமைக்கு ஒப்பாக 2021-2030 காலப்பகுதியில் பச்சை வீட்டு வளி வெளியேற்றத்தை 14.5% இனால் குறைப்பதற்கு அர்ப்பணிப்புக்கான இணக்கப்பாடு (4% உள்நாட்டுக் கொள்ளளவு மூலம் மற்றும் 10.5% வெளிநாட்டு ஒதுக்கீடுகள் மற்றும் வசதிகள்) கிடைக்கின்ற அடிப்படையின் கீழ்) இலங்கை இணக்கப்பாடு வெளியிடியது.

2030 ஆம் ஆண்டளவில், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தில் 70% புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் பூர்த்தி செய்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது; 2050 ஆம் ஆண்டளவில் மின் உற்பத்தியில் காபன் நடுநிலையை அடைந்துகொள்ளல்; நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் கொள்ளளவை அதிகரிக்காமை மற்றும் காபன் நடுநிலையை அடைவதற்கு எதிர்பார்த்தல்
ஆகிய அபிலாசைகளை உள்ளடக்குவதற்கு இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களின் மூலம் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளல்.

தேசிய மட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்களின் செயற்படுத்துகைக்காக
தேசிய வழிகாட்டல் குழுவின் முதலாவது கூட்டம் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்திற்கு பழக்கப்படுதல் தொடர்பான தேசிய நிபுணர்களின் 16 ஆவது கூட்டம் குழுக் கூட்டம் திசெம்பர் மாதம் 28 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடையும் விடயத்தின் விரிவாக்கம், நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் துறையை உள்ளடக்குதல் போன்று எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வெளிநாட்டு உதவியுடனான செயற்றிட்டங்கள் தொடர்பில் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

காலநிலை மாற்றக் குறைப்புத் தொடர்பான தேசிய நிபுணர் குழு

பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் செயற்பாட்டின் போது வழிகாட்டல்களை வழங்குவதற்காக நிறுவப்பட்ட தேசிய நிபுணர் குழுவின் முன்னேற்றத்தை அறிக்கையிடும் காலப்பகுதியினுள் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு, பின்வரும் செயற்பாடுகளுக்காக இரண்டு உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன.

- .நகரங்களுக்காக பச்சை வீட்டு வாயு வெளியேற்ற இன்வென்றியைத் தயாரித்தல் மற்றும் பராமரிப்பதற்கான வழிகாட்டல் கைநூலைத் தயாரித்தல் பணியைக் கண்காணித்தல்
- 2050 ஆம் ஆண்டில் காபன் நடு நிலமையைப் பெறுவதற்கான வழிகாட்டல் வரைபடத்தைத் தயாரித்தல்

காலநிலை மாற்றங்கள் காரணமாக மனித குடியேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக பாதகமான தாக்கங்களுக்கு வினைத்திறனுடனும் மற்றும் பயனுறுதியான விதத்திலும்/ விளைதிறனான விதத்திலும் தாக்குப்பிடிப்பதற்கு பல்வேறுபட்ட தரப்பினர்களால் எடுக்கப்படுகின்ற அனைத்து தலையீடுகளையும் ஒருங்கிணைப்பதற்காக காலநிலை மாற்றங்களிற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய மனித குடியேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான வழிகாட்டல் ஒன்று தயாரிக்கப்பட்டது.
பசுமை காலநிலை நிதியத்தின் (GCF) கீழ் பெயரிடப்பட்ட நேரடி நிதி அணுகுமுறை நிறுவனங்களுக்கான வசதிகளை வழங்குவதற்காக GCF பிரதேச அலுவலகத்துடன் 3 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் DFCC வங்கி பசுமை காலநிலை நிதியத்திற்கு அங்கீகாரம் எதிர்வரும் GCF சபைக் கூட்டத்தில் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. HNB, HDFC, NDB மற்றும் கொமர்சல் வங்கிக்கான Online Accreditation System Account கணக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

பசுமைக் காலநிலை நிதியத்திற்காக முன்வைக்கப்பட்ட செயற்றிட்டப் பிரேரணைகள் மூன்றில் இரண்டுக்கான திட்டங்களுக்கு ஒப்புதல்/ அனுமதி வழங்கப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டின் பசுமை காலநிலை நிதியத்தின் தயாராதல் நிதியத்தை இலக்காகக் கொண்டு இலங்கையின் கீழ் நீரேந்தும் பகுதி மற்றும் கரையோரப் வலயப் பகுதிகள் குறித்து விசேட கவனம் செலுத்தி உலக வலையமைப்பு பங்குடமை (GWP) உடன் சமர்ப்பிக்கப்பட்டதேசிய அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபை (NDA) தயாராகும் இரண்டாவது செயற்றிட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

- மூன்றாவது செயற்றிட்டம் பசுமை காலநிலை நிதியத்தின் 2022 ஆம் ஆண்டில் தயாராதல் நிதியை இலக்காகக் கொண்டு சமர்ப்பிப்பதற்காக உணவு மற்றும் விவசாய அமைப்புடன் தர்க்கவியல்செயற்பாட்டுச் சட்டகம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய அதிகாரமளிக்கப்பட்ட அதிகார சபையின் (NDA) ஆயத்தப்படுத்தல் முதலாவது செயற்றிட்டம் மூலம்

- பசுமை காலநிலை நிதியத்திற்கு இலங்கைக்காக தேசிய நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது.

- பசுமை காலநிலை நிதியத்தின் செயற்பாட்டுக் கையேடுகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்கள் ஒருங்கிணைப்பு உபாயத்திற்காக கையேடுகள் அச்சிடப்பட்டன.
பசுமை காலநிலை நிதியத்தின் செயற்பாட்டுக் கையேடுகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்கள் ஒருங்கிணைப்பு உபாயங்களுக்கான பொழிப்புக் கையேடுகள் அச்சிடப்பட்டன

- பசுமை வளர்ச்சித் திட்டத்தை வரைவு செய்வதற்கான ஊவா, மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களுக்கான மூன்று செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

- பசுமை அபிவிருத்தி உபாய மூலோபாயத்திற்கான பங்குதாரர்களின் செல்லுபடியானதாக்கும் (validation meeting) கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

இலங்கையில் தழுவல் தேசிய திட்டமிடல் செயன்முறைகளும் அமுலாக்கல்கொள்தி றனை வலுவூட்டும் கருத்திட்டம்,

உலகளாவிய பசுமை மேம்பாட்டு நிறுவனத்தின் (GGGI) ஊடாக பசுமை காலநிலை நிதியத்தின் தழுவல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக தயார் செய்தல் ஏற்பாட்டு ஒதுக்கீடுகளுக்காக இலங்கை விண்ணப்பித்து மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் மொத்த வரவு செலவுத் திட்டம் 2,975,000 அ.டொலர் எனபதுடன் இது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 42 மாத காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும். .

மாகாண அபிவிருத்தித் திட்டமிடளுக்கான காலநிலை மாற்றத் துறையை உள்ளீர்த்தல்

இச்செயற்றிட்டத்தின் ஊடாக பிரதேச ரீதியாக காலநிலை
மாற்றங்களுக்கான திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான பின்னணியைத் தயார் செய்தல், பழக்கப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் பச்சைவீட்டு வெளியேற்றத்தைக் குறைத்தற்கான வழிகாட்டல் வரைபடத்தினைத் தயாரித்தல பிரதேச காலநிலை பணிகளை அடைந்து கொள்வதற்காக காலநிலைப் பிரிவுகளைத் தாபித்தல்..காலநிலை வளங்கள் பகிர்வுத் திட்டங்கள் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் தேசிய காலநிலையுடன் தொடர்புடைய பிரதேச அடிப்படையிலான தரவுத் தளமொன்றினைக் கட்டியெழுப்புதல் பிரதானவையாகும்.

மனித இடப்பெயர்ச்சி , சுற்றாடல் தரத்தன்மை வீழ்ச்சி, இணைந்த பிரச்சினைகள்
மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு இடையிலான அந்நியோன்ய தொடர்பினை இனங்காண்பதற்கும், காலநிலை மாற்றங்களின் தாக்கங்களினால் ஏற்படும் அனர்த்தங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு சமூகத்தின் தாக்குப்பிடிக்கும் திறன் விருத்தி மற்றும் மக்களை காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்துவதநற்காக துறைசார் கற்கைகள் மேற்கொள்வதற்காக ஏற்கனவே இந்தத் தகவல்களை உள்ளடக்கி பத்திரிகை அறிக்கைகள் மற்றும் பல்வேறுபட்ட தலைப்புக்களில் இணையத்தள வழி கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

2.1.4 வாயு வளங்கள் முகாமைத்துவம்

வீட்டு வாயு நிலைமை முகாமைத்துவம்

தூய வளி 2025 அமுலாக்கல் திட்டத்தின் ஒரு பிரதான உபாயமாக வீட்டுவளி தர முகாமைத்துவ வழிகாட்டல்கள் தயாரிப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், ஆரம்பக் கட்டமாக இணையவழியான கூட்டங்கள் பல நடாத்தப்பட்டதுடன் வீட்டு வளி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டல் தொடர்பிலான மூன்றாம் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

நிலையான மூலவளங்களினால் ஏற்படும் வளி மாசடைதலைக் கட்டுப்படுத்தல்

நிலையான மூலங்களினால் வெளியிடப்படுகின்ற தரங்கள் மற்றும் வளி மாசடைதல் காரணமாக ஏற்படுகின்ற சுகாதாரத் தாக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டும் செயலமர்வொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வட மத்திய மாகாணத்தில் பாரிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை.அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது மேற்குறிப்பிட்ட நியமங்கள் பற்றிய அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலர்கள் மத்தியில் விழிப்பூட்டுவதற்காக ஒரு இணையவழி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது

ஒலி மாசடைதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான செயற்பாடுகள்,

வாகனங்களிலிருந்தான ஒலி மாசடைதலைக்தடுப்பதற்கான சிறந்த தீர்வினைக் கண்டறியும் நோக்கில் மோட்டார் வாகனப் போக்குவரத்து.திணைக்களம், இலங்கை பொலீஸ் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபைபோன்ற பிரதான பங்குதார நிறுவனங்களின்பங்களிப்புடன் பல்தரப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளை மேம்படுத்தும்
பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வாகன வளி (வாயு) வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல்

.

வாகன வளி வெளியேற்றத்தை பரிசோதிக்கும் (VET) நிகழ்ச்சித்திட்டத்துடன் பாதையோர வாகன வாயு வெளியேற்ற பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர். சகல வாகனங்களினதும் வாயுவெளியேற்ற பரீட்சித்தல் நிலையங்களின் தரப்படுத்தல் தொடர்பில் இலங்கை தரநிர்ணய சபையுடன் இணைந்து கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. மேலும், இலங்கையின் வளிமட்ட முகாமைத்துவம் தொடர்பான நிபுணர்களின் ஒத்துழைப்புடன் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற வாகனங்களின் வாயு வெளியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீள உயிரூட்டல் வழங்குவதற்காக
வழிகாட்டல் வரைபடமொன்றை தயாரித்து எதிர்கால நடவடிக்கைகளுக்கான வாகனங்களின் வாயு வெளியேற்றல் நிதியத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மின்சார வாகனப் பாவனையை மேம்படுத்துவதற்காக குழுக்களை நியமித்தல்

இலங்கையில் மின்சார வாகனப் பாவனையினை ஊக்குவிக்கும் வகையில் சுற்றாடல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகராம் வழங்கப்பட்டது. அதற்கிணங்க, இலங்கையில் மின்சார வாகனப் பாவனையினை ஊக்குவிப்பதற்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் குழுவிற்கு உதவுவதற்காக தொழில்நுட்ப குழுவொன்றும் நியமனம் செய்யப்பட்டது.

இலத்திரனியல் இடப்பெயர்வுக்கு மாறுவதற்காக நாடுகளிற்கு உதவுகின்ற உலகளாவிய நிகழ்ச்சித் திட்டம்.

இலங்கையில் இலத்திரனியல் இடப்பெயர்வு மேம்படுத்தப்படும்.
நிலையான மற்றும் வினைத்திறனான இலத்திரனியல் இடப்பெயர்வு முறைமையொன்றினை தாபிப்பதற்கான செயற்றிட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு உலகளாவிய சுற்றாடல் வசதிகளின் (GEF) தேசிய மையமாகிய சுற்றாடல் அமைச்சுக்கு நிதி உதவி கிடைக்கப்பெற்றுள்ளது.

இலத்திரனியல் வாகனங்களுக்கான தொழில்நுட்பங்கள், இலத்திரனியல் இரட்டைச் சக்கர மோட்டார் வாகனங்கள், இலத்திரனியல் முச்சக்கர வண்டிகள், மற்றும் இலத்திரனியல் சைக்கிள்கள் என்பனவற்றிட்கு புதுப்பிக்கத்தக்க சக்தியைப் பயன்படுத்தி அவற்றை இயக்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வகதிகள், மின்கல முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்ப மாற்றீடுகளைக் காட்சிப்படுத்தல் உள்ளடங்கலாக முன்மாதிரிச் செயற்றிட்டத்தை அநுராதபுரம் புனித நகரத்தில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



2.1.5 சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரம்

இலங்கையின் சுற்றாடல் நட்புறவுக்கான தேசிய சட்டகத்தின் வரைவை SLAB மற்றும் SLSI ஆகிய பிரதான தரப்பினர்களுடன் இணைந்து செல்லுபடியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டகம் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் அமைச்சுக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அறிஞர் தரப்புக்களின் ஒத்துழைப்புடன் பின்னணித் தகவல்களைச் சேகரிக்கும் சந்தை ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டது 2021.03.30 ஆம் திகதி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று இடம்பெற்றது.

பசுமை கணக்கீட்டு நிகழ்ச்சித்திட்டம்.

பசுமை கணக்கீட்டு நிகழ்ச்சித்திட்டம் பங்குதார நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களின் உதவியுடன் இணையவழி கருத்தரங்கொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இக் கருத்தரங்கிற்கான தொழில்நுட்பப் பங்களிப்பை வயம்ப (வடமேல்) மற்றும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டது. கருத்தரங்கிற்காக பசுமை கணக்கியல் ஆலோசனை சபையை அறிவுறுத்தி அவுறுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் பரிசீலனை மட்டத்திலான சூழல் முறைமைச் சேவைகள் மற்றும் சூழல் முறைமைச் சேவைகள் கணக்கீடு மற்றும் சுற்றாடல் முறைமை சேவைகளின் நிதிசார் பெறுமதிகளை கணிப்பீடு செய்தல் ஆகிய விடயங்களின் கீழ் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

பசுமை அறிக்கையிடல் முறைமை

தேசிய பசுமை அறிக்கையிடல் முறையின் கீழ் இவ்வாண்டினுள் 15 கைத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. இதற்காக இணைய வழியாக Google படிவம் மூலம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. பதிவுசெய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு இணைய வழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

பசுமை உற்பத்தியினை ஊக்குவித்தல் மற்றும் பசுமை தொழில்களை விருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டம்

நீலப் பசுமை கிராமிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் , நாட்டின் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்ற பல்வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. .


எட்டுப் பங்குதாரர்களின் பங்கேற்புடன் முன்னாயத்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.





2.1.6 சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம்.

பிளாஸ்ரிக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவத்திற்கான தொடர்பாடல் மூலோபாயம் தயார் செய்யப்பட்டுள்ளது.



“

ஒரு தடவை பயன்படுத்தி அகற்றுகின்ற பிளாஸ்டிக் பயன்பாட்டைக் தடை செய்தல்” இதற்காக 2021 ஆம் ஆண்டின் முதற்பகுதியில் ஒழுங்குவிதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

பின்வரும், ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி அகற்றுகின்ற பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, வர்த்தகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கு தடைசெய்தல் (தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் பகுதி 1). 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதிய 2211/50 ஆம் இலக்க வர்த்தமானி மூலம்,


- விவசாய இரசாயனப் பொருட்களை பொதியிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் பொலிஎத்திலீன் டெரெபதலெட் (PET அல்லதுபொலிவயினல் குளோரைட் (PVC) பொருட்கள்

- நிகர கொள்ளளவு. மீ .லீ 20 அல்லது தேறிய பாரம் கி.ராம் 20 சமமான அல்லது அதைவிடக் குறைந்த செசே பொதிகள் (உணவு மற்றும் மருத்துவப் பொதி தவிர)

- காற்றடைக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் (பலூன்கள், பந்துகள், நீரில் மிதக்கின்ற, நீச்சல் தடாகத்தில் பயன்படுத்தப்படுகின்ற விளையாட்டுப் பொருட்கள் மற்றும் நீர் விளையாட்டு உபகரணங்கள் தவிர்ந்த) ·
- பிளாஸ்டிக் கூர் கொண்ட (Stem) காது துடை பஞ்சு (Cotton buds) (மருத்துவ/ சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படுகின்ற கொட்டன் பட்டன் தவிர்ந்த) தடை செய்யப்பட்டது.

(ii) பிளாஸ்டிக் பொருட்களை இனங்காண்பதற்கான குறியீடு - 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதிய 2211/50 ஆம் இலக்க வர்த்தமானியில்” வெளியிடப்பட்டது

“ இலங்கையில் குப்பை மேடுகளை பாதுகாப்பாக மூடிவிடல் மற்றும் புனரமைப்பு தொடர்பான வழிகாட்டல்" மேற்கொள்ளப்பட்டதோடு இதற்கான நிதி IGES /CCET (யப்பான்) நிறுவகத்தினால் வழங்கப்பட்டது. இந்த வழிகாட்டியின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிப் பிரதிகள் அச்சிடப்பட்டு நிறைடைந்துள்ளது சிங்களமொழிப் பிரதிகள் அச்சிடப்பட்டு வருகின்றன.



ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி அகற்றுகின்ற பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, வர்த்தகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கு தடைசெய்தல் (தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் பகுதி 2). இதற்காக அமைச்சரவை பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதோடு அந்த முன்மொழிவு தொடர்பாக அமைச்சரவைப் பரிந்துரை கடைக்பெற்றுள்ளது.

இலங்கையின் நகர்ப்புர, வீடுகள், உணவு விநியோகச் சேவைகள், சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளுக்காக உணவுக் கழிவுகளைக் குறைப்பதற்கும், தடுப்பதற்குமான வழிகாட்டல் .2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.

முன்பள்ளிப் பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்காக எஸ்பஸ்டோஸ்/ மாற்றுப் பயன்பாட்டு வழிகாட்டல்கள். வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

அல்கீ உருவாகி பாராளுமன்றம் வாவியின் நீரின் தரம் பழுதடைந்துள்ளதுடன் அதனை மீளமைத்தல் தொடர்பாக செயலாற்றுகைப் படையணிக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் அது தொடர்பான அறிக்கையும் முகாமைத்துவத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.“

“ வீடுகளை அண்மித்ததாக சேருகின்ற பயன்படுத்தப்பட்ட முகக் கவசங்களை பாதுகாப்பாக அகற்றல்” தொடர்பான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டது.

"நீண்ட காலம் காணப்படுகின்ற காபன் மாசுப்பொருட்கள் சம்பந்தமான தேசிய நடைமுறைப்படுத்தல் திட்டத்தை (Persistent Organic Pollutant)" இற்றைப்படுத்தல் மற்றும் சுகாதார சேவை கழிவுப் பொருட்கள் மற்றும் பாதரசம்/ இரசம் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முன்மொழிவொன்று UNDP நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு நிதி வழங்குவதற்காக GEF அமைப்பிற்கு அனுப்பப்பட்டதோடு, மேற்படி செயற்றிட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபையின் காணப்படுகின்ற ஒழுங்கு விதிகள் திருத்தத்திற்கு உடசேர்ப்பதற்காக பொலிதீன் பைகளுக்கான (Carry bags) விலைகளைத் தீர்மானிக்க முடியுமான வகையில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு பொலிதீன் பைகளின் விலைகளை நிர்ணயிப்பதற்கான தற்போதைய சட்ட நிலைமையை அறிக்கையிடுமாறு அமைச்சரவையின் செயலாளருக்கு கட்டளை விடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக அறிவுறுத்தும் தொடர்பாடல் கருவிகள் சிலவும் தயாரிக்கப்பட்டன.

2.1.7. நில வளங்கள் பாதுகாப்பு

நிலையான நில முகாமைத்துவ முன்மாதிரி இடங்களை நிறுவுதல் - கிரிபத்கொட "சோஜான்" செயற்றிட்டம்.

நிலம் அழிவடைவதை குறைத்து ஈரலிப்பான நிலம் சார்ந்த சூழல் முறைமையினை பாதுகாத்துக்கொண்டு விவசாய உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவுகின்ற இந்தோனேசியாவின் பாரம்பரிய தாழ் நில விவசாயப் பயிர்ச் செய்கை முறையொன்றான சோர்ஜான் (Sorjan) பயிர்ச் செய்கை முறை, களனிப் பிரதேச செயலகப் பிரிவில் கிரிபத்கொட நடை பாதை அருகில் 40 வருடங்களாகப் பயிர் செய்யப்படாத தலவத்துஹேன்பிட்டிய வடக்கு வயல் வெளியில் இந்த காணிப்பயன் பாட்டு மாதிரி நிருமாணிக்கப்பட்டது. இதற்காக 2.4 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பு 2021 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடுகள் மூலம் வழங்கப்பட்டது.

நுண் நிதி ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரியதாக நிலையான நில முகாமைத்துவம் மற்றும் நிலம் அழிவடைவதனை தடுக்கும் திட்டத்தின் கீழ் மண் மற்றும் கனிமத் துறையை அடிப்படையாகக் கொண்டு 6 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிலையான நில முகாமைத்துவம் தொடர்பான ஆராய்ச்சித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கும், பல்வேறு துறைகளுக்கான ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது. திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் நிலைபேறான நில முகாமைத்துவம் மற்றும் நிலம் அழிவடைதலைத் தவிர்த்தல் தொடர்பாக காணப்படுகின்ற தரவு மற்றும் தகவல்கள்தொடர்பாக காணப்படுகின்ற இடைவளியை நிரப்வைதற்கு இந்த ஆய்வுகள் மிகவும் பயனுடைவையாகும்.

- Investigation on productivity in intensively cultivated vegetable Growing Soils in Sri Lanka when Amended with poultry Litter Biochar
- Contribution of burrowing crabs (Sisarmidae) on sediment carbon storage. A cross sectional study from a mangrove system of Southern Sri Lanka
- A feasibility study on potential for utilization of natural rubber processing waste water for enhance of soil fertility
- Exploring the potential of proximal soil sensing for delineating soil texture based management zones.
- Assessing potential of Sri Lanka Mica and Micaceous Rocks as Alternative Sources of K-Fertilizer
- Quantification and characterization of efficient water generated in the sheet rubber and Crepe rubber processing industry in Sri Lanka



2.1.8 சுற்றாடல் கல்வி மற்றும் அறிவுறுத்தல்

சுற்றாடல் தொடர்பான கற்கைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் கீழ் மாணவர்கள், அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள், சூழல் உணர்திறன், சூழல் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படுகின்றன.

இதன்போது சுற்றாடல் உணர் திறன் கூடிய நபர்களை உருவாக்குவதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைக் குறைத்தல் இதன் அடிப்படை நோக்கமாகும். 2021 ஆம் ஆண்டில் 250 பாடசாலை மாணவர்களுக்கு மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.

சொபா சலன குறுந்திரைப்பட போட்டி மற்றும் சொபா சேயா சுற்றாடல் புகைப்படப் போட்டியை நடாத்துதல்.

இளம் திரைப்படக் (சினிமாக்) கலைஞர்களிடத்தில் சுற்றாடல்
பாதுகாப்பு தொடர்பான உளப்பாங்கினை விருத்தி செய்து சாதகமான சமூக கலந்துரையாடலொன்றை கட்டியெழுப்பும் நோக்குடன். சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு" சொபா சலன" குறுந் திரைப்படப் போட்டி " சொபா தஹம கலாத்மகவ தகிமு" என்ற தொனிப் பொருளாகக் கொண்ட " சொபா சேயா" சுற்றாடல் புகைப்படப் போட்டி நடாத்தப்பட்டது."

" சொபா சலன " குறுந்திரைப்படப் போட்டிக்கு இணைந்ததாக நடைபெற்ற பயிற்சிப் பட்டறை போட்டிகளிற்கு நடுவர்களாகக் கலந்து கொண்ட வளவார்களின் பங்களிப்புடன் 70 பேர் வரையான பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

"சொபா சேயா" சுற்றாடல் புகைப்படப் போட்டிக்காக புகைப்படங்கள் மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, 250 போட்டியாளர்கள் வரை தமது படைப்புக்களை அனுப்பியிருந்தனர்.

"சொபா சலன" குறுந்திரைப்படப் போட்டி மற்றும் "சொபா சேயா" சுற்றாடல் புகைப்படப் போட்டி ஆகியவற்றின் வெற்றியாளர்களுக்காக விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கௌரவ. சுற்றாடல் அமைச்சர் மற்றும் செயலாளர் அவர்களின் தலைமையில் கௌரவ அதிதிகள் மற்றும் போட்டியாளர்களின் பங்கேற்புடன் 2021.12.15 ஆம் திகதி அமைச்சின் எட்டாம் மாடியில் அமையப்பெற்றுள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சொபா சுற்றாடல் சஞ்சிகை மற்றும் நுண் பிலாஸ்டிக் மற்றும் நீங்கள் நூல் வெளியீடு

சுற்றாடல் ரீதியாக உணர்திறன்கொண்ட சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் சுற்றாடல் அமைச்சினால் சொபா சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

நுண் பிளாஸ்ரிக் மற்றும் அது தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான அறிவை வழங்கும்



நோக்கில் "நுண் பிளாஸ்ரிக் மற்றும் நீங்கள்" என்ற நூல் அச்சிடப்பட்டது. இந்நூல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் 1700 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.





உயிரியல் பாதுகாப்பு தொடர்பான அறிவு விருத்தி, பொதுமக்களை அறிவுறுத்தல் மற்றும் கல்வியும் பங்குபற்றலும்.

- உயிரியல் பாதுகாப்பு பட்டப்பின் படிப்பு கற்கைநெறியின் பாடவிதானம் மற்றும் பாடநெறிக்கான காகிதாதிகள் தயாரிக்கப்பட்டதுடன் ஆரம்ப (சாதாரண தரம்), இடைநிலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களிலான பாடத்திட்டங்களை மேம்படுத்துவதன் மூலம் உயிரியல் பாதுகாப்பிற்கான இடைவெளியை நிரப்புதல் தேசியக் கல்வி நிறுவகத்தின் (NIE) ஆலோசனையின் அடிப்டையில் மேற்கொள்ளப்பட்டது

- உயிரியல் பாதுகாப்பு தொடர்பான விபரங்கள் அடங்கிய கட்புல செவிப்புலழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்து பல்வேறு ஊடகங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டன / பகிரப்பட்டன.

- இலக்கிடப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. (பல்கலைக்கழகங்கள் ,SCAs, NCA, NGOs, ஊடகங்கள், பாடசாலைகள் போன்றவை)

- உயிரியல் பாதுகாப்பு தொடர்பான ஆறாவது செய்தி மடல் வெளியிடப்பட்டது.

சுற்றாடல் உணர்திறன்கொண்ட பிரதேசங்களுக்காக 05 துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன

வில்லு தொடர்பான துண்டுப் பிரசுரம்

பிரம்புக் காடு (வேவல் கெலே) தொடர்பான துண்டுப் பிரசுரம்

மானேவ - கந்த சுற்றாடல் உணர்திறன் மிக்க பிரதேசங்களுக்கான துண்டுப் பிரசுரம்

கங்கே – வாடிய சுற்றாடல் உணர்திறன் மிக்க பிரதேசங்களுக்கான துண்டுப் பிரசுரம்

கலாவெவ – அவுக்கன சுற்றாடல் உணர்திறன் மிக்க பிரதேசங்களுக்கான சு துண்டுப் பிரசுரம்



சுற்றாடல் உணர்திறன் கொண்ட பிரதேச கொள்கை தொடர்பான இலத்திரனியல் ஊடக கலந்துரையாடல்களை நடாத்துதல்.



- சுற்றாடல் உணர் திறன் கொண்ட பிரதேசங்கள் தொடர்பான செயற்றிட்டம் பற்றிய பத்திரிகை மேலதிக இணைப்பொன்று சிலுமின செய்திப் பத்திரிகையுடன் வெளியிடப்பட்டது.
- இலங்கையின் சுற்றாடல் உணர் திறன் கொண்ட பிரதேசங்களை இனங்காணல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான மூலாதாரக் கையேடொன்று தயாரிக்கப்பட்டது.
- இலங்கையில் சுற்றாடல் உணர் திறன் கொண்ட பிரதேசங்களை இனங்காணல் பற்றிய சிறிய கையேடொன்று தயாரிக்கப்பட்டது.
- "சொபா சங்ஹிதா" என்ற பெயரில் பாடசாலை சிறுவர்களுக்கான சிறிய வரைபடக் கையேடொன்று (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டது.

புதிய சுற்றாடல் உணர்திறன்மிக்க பிரதேசக் கொள்கை தொடர்பான இலத்திரனியல் ஊடகக் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

ஓசோன் பலவீனடைதல் மற்றும் உயர்ந்த உலக வெப்பமடைதல் கொண்ட குளிரூட்டி பயன்பட்டைக் கட்டுப்டுத்தல் மற்றும் பாவனையிலிருந்து அகற்றுதல் தொடர்பில் அறிவுறுத்தல்.

குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டிகள் (வளிச்சீராக்கி) துறைக்கான
பசுமைத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.

புதிய தொழில்நுட்ப வழிமுறைமைகள் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான 17 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை 500 ஆகும்.

பெண் சாரணர்களுக்காக ஓசோன் நட்பு "ஓசோன் மித்துறு" சின்னம் அறிமுகம் செய்தல்



ஓசோன் அறிவியல் தொடர்பான அறிவைப் பரவலாக்கம் செய்வதற்காக இரண்டு அறிவுக் கருவிகளை (சாதனங்கள்) விருத்தி செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2021 சர்வதேச ஓசோன் தினத்திற்குச் இணையாக ஓசோன் தினத்தின் தொனிப் பொருளைக் குறிக்கும் சுற்றாடல் நட்புறவான பை (பேக்), ரீ சேட்டுடன் அறிவுறுத்தல் துண்டுப் பிரசுரமொன்றும் விநியோகிக்கப்பட்டது.

வளி வளங்கள் முகாமைத்துவம் மற்றும் ஓசோன் அழிவடைதல் மற்றும் உயர்வான உலகலாவிய வெப்பம் கொண்ட குளிரூட்டல் பாவனை கட்டுப்படுத்தல் மற்றும் பாவனையிலிருந்து அகற்றுதல் தொடர்பில் அறிவுறுத்தல்.

வீட்டு/உள்ளக வளி மாசுபடுதல், வாகனங்களின் மூலம் ஏற்படுகின்ற வளி மாசுறுதல், ஒலி மாசடைதல் மற்றும் திறந்த எரிப்பு எனும் தொனிப்பொருளின் கீழ் ஊடகங்கள் ஊடாக பொது மக்களை விழிப்புணர்வூட்டவைதற்குப் பயன்படுத்தக்கூடிய நான்கு குறும்படங்கள்/காணொளிகள் தயாரிக்கப்பட்டன.

வளித் தர முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக டெய்லி மீரர் பத்திரிகையுடன் இணைந்து மேலதிக பத்திரிகை அனுபந்தமொன்று வெளியிடப்பட்டது. "நீல வானத்திற்காக தூய்மையான வளி தொடர்பான சர்வதேச தினத்திற்கு" இணையாக இந்த மேலதிக அனுபந்தம் வெளியிடப்பட்டது

நிலையான வளி வெளியேற்றத் தரக் கட்டளைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் பிரதேச மட்டத்தில் சுற்றாடல் அலுவலர்கள், அபிவிருத்தி அலிவலர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அதன் இலக்குக் குழுவாகக் காணப்பட்டனர்.

நிலையான நில முகாமைத்துவம் தொடர்பாக அறிவுறுத்துதல்.

- ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் ஆங்கிலம் மொழி மூலம் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ள மண் வளங்கள் மற்றும் நிலைபேறான நில முகாமைத்துவம் தொடர்பான 04 சுவரொட்டிகள் (போஸ்டர்கள்) சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்து அச்சிடுதல்.

- 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட "Keep soil Alive, Protect Soil Biodiversity " என்ற சிறிய நூலினை " மண் உயிரியல் பல்வகைமைத் தன்மையைப் பாதுகாப்பதற்காக மண்ணை உயிர்ப்பாக வைத்திருப்போம்" எனும் தலைப்பில் சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்து அச்சிடுதல்,

- பாலைவனமாதலைத் தவிர்த்தல் மற்றும் வறட்சியை ஒழித்தல் சர்வதேச தினம் மற்றும் அதனோடு இணைந்த்தாக "மறு சீரமைப்பின் ஊடாக ஆரோக்கியமான நிலத்தைக் கட்டியெழுப்புதல்" என்ற தலைப்பில் சிறிய நூல் ஒன்றை அச்சிடுதல்,

- பாடசாலைப் பிள்ளைகளை மையமாகக் கொண்டு மண்ணில் உள்ள பெறுமதியைக் தெளிவு படுத்துதல் மற்றும் மண் பாதுகாப்பு தொடர்பான சிறிய புத்தகத்தை "WAYS TO PROTECT OUR SOIL" என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் தயாரித்து அச்சிடுதல்.

- நிலம் அழிவுக்குள்ளாவதைக் குறைத்தல் மற்றும் நிலைபேறான நில முகாமைத்துவத்துக்கு மக்களை வழிப்படுத்துவதற்காக நில வளங்கள் பிரிவினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்ட நில மாதிரிகள்தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட "நிலைபேறான புவி முகாமைத்துவ மாதிரிகள்' என்ற தலைப்பில் புத்தகமொன்றை தயாரித்து அச்சிடுதல் மற்றும்,

- மண் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களை அறிவூட்டுவதற்காக "இலங்கையின் மண்" என்ற பெயரில் துண்டுப் பிரசுரமொன்று தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டது.

பொலீஸ் உத்தியோகத்தர்களுக்காக சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் 2021 ஆம் ஆண்டிற்கான முதலாவது செயலமர்வு 2021.03.19 ஆம் திகதி பொலன்னறுவை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பொலீஸ் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டது.

பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சுற்றாடல் விடயத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளுக்காக இரண்டு வதிவிடப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாண நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக முடிவடைந்ததோடு, முறையே 43 மற்றும் 24 பட்டதாரிகள் அப்பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டனர்.



2.1.9 சர்வதேச சுற்றாடல் உறவுகள்

ஆசிய பசுபிக் வலயத் தூதுவர் கென் ஓ பிளேஹர்ட் (**Ken O Flaherty**)அவர்களின் இலங்கை விஜயத்தை தொடர்ந்தே இலங்கை, 2021 நவம்பர் மாதம் நடைபெறவுள்ள UNFCCC COP26 இற்காகத் தயாராகியது. ஆசிய பசுபிக் வலயத்தின் COP 26 வலயத் தூதுவர் மற்றும் பங்குதாரத் தரப்பினர்களின் கூட்டமொன்று 2021 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டது. ஆசிய பசுபிக் வலயத் தூதுவர் கென் ஓ பிளேஹர்ட், கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர்களுக்கிடையிலான சந்திப்பொன்றும் இவ்விஜயத்தின் போது இடமபெற்றது.



கொரியக் குடியரசின் தூதுவர் கௌரவ **Santhush Woonjin JEONG** அவர்களுக்கும் கௌரவ அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று 2021 ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி நடபெற்றது



தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (SACEP) பணிப்பாளர் நாயகம் - சகேப் நிறுவனத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட புதிய பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சின் செயலாளருடனான சந்திப்பொன்று .2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி மேலும் இடமபெற்றது.

உலகலாவிய பசுமை விருத்தி நிறுவனப் பணிப்பாளர் நாயகம்

- உலகலாவிய பசுமை விருத்தி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு உத்தேச செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று அதன் பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்களுக்கிடையில்.
2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் மற்றும் செயலாளர் இடையே நட்புறவு சந்திப்பொன்று இடம்பெற்றது.

UNFCCC COP26 **ஆசிய பசுபிக் பிராந்தியத் தூதுவர். திரு. கென் ஓ பிலெஹர்டி அவர்களின் இலங்கை விஜயம்**

இரு தரப்பு சுற்றாடல் ஒப்பந்தம்.

நுண் பிளாஸ்டிக் ஆய்வுக்காக இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய இராச்சியத்தின் பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்துக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பெறுபேறாக, உள்நாட்டு ஆய்வுகூடங்களில் நுண் பகுப்பாய்வு கொள்ளளவை அதிகரிக்க முடிந்தது. ·

- **ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின்** (UNEP) **நிரந்தர பிரதிநிதிகளின் குழுவுக்கு** (CPR)) சுற்றாடல் அமைச்சினதும் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் உத்தியோகத்தர்களைக் கொண்ட பணிக்குழுவை நியமனம் செய்தல்
- UNEP **இன் " இயற்கையான நேர்க்கணிய உணவு முறைமை அமர்வு " இற்கான குழு உறுப்பினராக கலந்துகொள்ளல்.**
- **தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம்** (SACEP) **கூட்டத்தின் மதியுரை செயற்குழுத் தலைவராக இலங்கையை நியமித்தல் ·**
- **உலகளாவிய ஆராய்ச்சிக்கானஆசிய பசுபிக் வலையமைப்பின்** (APN) **செயற்பாட்டுக் குழுவின் துணைத் தலைவராக இலங்கையினை நியமித்தல்**

2021 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 06 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆசிய பசிபிக் வலய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் 4 ஆவது மாநாட்டில் சிரேட்ட உத்தியோகத்தர் சபைத் தலைவர் பதவிக்காக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் திரு. அணில் ஜாசிங்க அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்.



சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் திரு. அணில் ஜாசிங்ஹ அவர்களுடன் ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் நாயகம் (UN-ASG)

கன்னி விக்னராஜா உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவி நிர்வாகி மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணியகத்தின் பணிப்பாளர் ஆகியவர்களுக்கிடையே நல்லெண்ண சந்திப்பொன்று 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சில் இடம்பெற்றது. அதில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி ரொபட் ஜூகம் மற்றும் காலநிலை மற்றும் சுற்றாடல் பிரிவு பிரதாணி கொள்கை விசேட நிபுணர் கலாநிதி புத்திக ஹப்புஆரச்சி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிலைபேறான நைதரசன் முகாமைத்துவம் தொடர்பான சுற்றாடல் தீர்வினை நடைமுறைப்படுத்தல்.

- காலநிலை மற்றும் பசுமை மறுசீரமைப்புக்கான/ மீளமைப்புக்கான நைதரசன்- இணையவழி நிகழ்ச்சித் திட்டம்.
- UNEP ஒருங்கிணைப்பில் 2021 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடாத்தப்பட்ட கொழும்பு பிரகடனத்தின் பங்குதாரர்கள் மற்றும் சர்வதேச நைதரசன் முகாமைத்துவ முறைமையின் செயற்றிட்டப் பணிப்பாளர் பேராசிரியர் மார்க் சூடன் அவர்களின் தலைமையில் ஆகும்.
- யூலை மற்றும் திசெம்பர் மாதங்களில் **UNEP** இல் நைதரசன் தொடர்பான இடைக்கால சர்வதேச உடன்படிக்கை ஒருங்கிணைப்பு பொறிமுறை (INCOM) இற்காக தீர்மானிக்கப்பட்ட விடயப் பரப்பு (ToR) தயாரிப்பதற்கான பணியாட் குழுவின் உறுப்பினர் ஒருவராகப் பங்கேற்றல்
- 4"நைதரசன் மற்றும் காலநிலை சந்தர்ப்பங்கள் - தெற்கு" "ஆசியாவிலிருந்து உலகத்திற்கு" – இலங்கை மற்றும் **SACEP** இற்கும் இடையிலான பங்குதார நிகழ்ச்சித்திட்டம் **(COP 26 UNFCC)** சுற்றாடல் அமைச்சின் சர்வதேச உறவுகள் பிரிவினால் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி வெற்றிகரமாக ஒழுங்கமைக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 31 ஆம் திகதி கிலாஸ்கோ நகரில் வியாபார இல்லத்தில இலங்கையுடன் GEF/UNEP "சர்வதேச நைதரசன் முகாமைத்துவ முறைமை (INMS), GCRF தென்னாசிய நைதரசன் மையம் (SANH), தென்னாசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் (SACEP) மற்றும் பிரித்தானிய தூதுவர் அலுவலகம் மூலம் COP 26 UNFCC இற்காக நைதரசனை மீளக் கண்டறிதல்" பங்குதாரர் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன
- **5GEF** சிறிய நன்கொடை நிகழ்ச்சித் திட்டங்களின் கொள்கை பற்றிய உரையாடல்: உலகளாவிய சுற்றாடல் வசதிகளூடாக நிதி வழங்கப்படுகின்ற சிறிய நன்கொடை நிகழ்ச்சித் திட்டத்தின் வழிநடாத்தல் கட்டமான 6 (OP 6) புவிக் காட்சிகள் மூன்று மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது நக்கல்ஸ் பாதுகாப்பு வனப்பூங்கா மற்றும் அதன் பாதுகாப்பு வலயம், மன்னார் தொடக்கம் கடற்கரையோர வலயம் மற்றும் யாழ்ப்பாணம் வரை மற்றும் கொழும்பு ஈரநிலம் GEF இல் OP6 இறுதிக் கட்டத்தில் காணப்படுவதால் அந்த 3 புவியியல் காட்சிகளைத் தயாரித்தல் பற்றிய கொள்கை கலந்துரையாடலின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது
- ஏழாவது வழிநடாத்தல் கட்டம் உலகளாவிய சுற்றாடல் வசதிகள்/ சிறிய நன்கொடை நிகழ்ச்சித்திட்டம் **GEF/SGP** உறுதிப்படுத்தல் செயலமர்வு: GEF செயலகத்திற்கு செயற்றிட்டத்தை/கருத்திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் அதனை வெற்றிகரமாக திட்டமிடல் மற்றும் வலுவூட்டம் செய்வதற்காக அமைச்சு UNDP நிறுவனத்தோடு இணைந்து உரிய பங்குதாரத் தரப்பினர்னளுடன் உறுதிப்படுத்தல் செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டது.
- GEF சிறிய அளவிலான நன்கொடை நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட இலங்கையின் வடமேற்குக் கரையோரப் பிரதேசத்தின் மல்வத்து ஓயா தொடக்கம் பூநகரி வரையிலான சதுப்பு நிலத் தாவரங்கள், உப்பு முனைகள் மற்றும் கரையோர பகுதி அட்லஸ் வரைபடமாக்கல் கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையில்மேற்கொள்ளப்பட்டது.

சர்வதேச சுற்றாடல் உடன்படிக்கைகள், அமைப்புக்கள், ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கான வருடாந்த அரச பங்களிப்பு நிதி மற்றும் அனுசரணை வசதிகளினால் 2021 ஆம் ஆண்டில் பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP)
- ஐக்கிய நாடுகளின் பாலைவனமாக்கல் ஒழிப்பு தொடர்பான மாநாடு (UNCCD)
- ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைக்கப்பட்ட மாநாடு (UNFCCC) கியாத்தோ அமைப்பு
- பாதகமான கழிவுப் பொருட்கள் தேசஎல்லை ஊடாக போக்குவரத்துச் செய்தல் மற்றும் வெளியேற்றுதல் கட்டுப்பாட்டுக்கான பாசல் மாநாடு (Basel)
- மினமாட்டா மாநாடு
- உலக பாதுகாப்பு சங்கம் (IUCN)
- உயிரியல் பல்வகைமை மாநாடு மற்றும் உயிரியல் பாதுகாப்பு தொடர்பான கூட்டமைப்பு
- தென்னாசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் (SACEP)
- தென்னாசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான (SACEP) ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுசரணை வசதிகள்
- தென்னாசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்னாசிய கடல் வேலைத்திட்டம்
- நீண்டகாலம் காணப்படுகின்ற காபன் மாசுக் காவிகள் சம்பந்தப்பட்ட ஸ்ரோக்கோம் மாநாடு.



2.1.10 சுற்றாடல் தினக் கொண்டாட்டங்கள்

சர்வதேச உயிரியல் தின வைபவம்

(2021 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி)

" பாதுகாப்பான இயற்கையின் பங்காளர்களாக இருப்போம்" என்பது இவ்வருட தொனிப்பொருளாகும்.

இவ்வருடத்தின் பல்வகைமை உடன்படிக்கையின் தொனிப்பொருளுக்கு அமைய விதுசர மற்றும் விஜய பத்திரிகைகளில் இரண்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டன. மேலும், லுணுகம்வெஹெர தேசிய வனப்பூங்காவில் சுமார் 4 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பாதையின் இருமருங்கிலும் காணப்படுகின்ற மூடு தாவரங்களைப் பொது மக்களின் பங்களிப்புடன் அப்புறப்படுத்தும் நிகழ்ச்சித்திட்மொன்றை மேற்கொள்ளல்.

2021 ஆம் ஆண்டின் சர்வதேச சுற்றாடல் தினத்தை நினைவு கூறும் நிகழ்ச்சித் திட்டம் .

(2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி)

இவ்வருட சர்வதேச சுற்றாடல் தினம் " சுற்றாடல் முறைமை மீளமைப்பு" என்றதொனிப்பொருளின் கீழ் சுற்றாடல் முறைமைகளைப் பாதுகாப்பதன் பெறுமதியைக்விக்காட்டி கொண்டாடப்பட்டது. இதற்கு இணையாக 2021.06.05 ஆம் திகதி சுற்றாடல் துறை நிபுணர்களின் பங்கேற்புடன் zoom தொழில்நுட்பத்தின் ஊடாக அறிவுறுத்தல் செயலமர்வு ஒன்றை நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உலக பாலைவனமாதல் மற்றும் வரட்சி ஒழிப்பு தின நிகழ்ச்சித் திட்டம்

(2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 17)

2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் உலக பாலைவனமாதலைத் ஒழித்தல் தினத்திற்கு இணையாக இணைய வழிமுறையினூடாக விரிவுரைகளை நடாத்தல்.

சர்வதேச கண்டல் சுற்றாடல் முறைமைப் பாதுகாப்புத் தின நிகழ்வு நிகழ்ச்சித் திட்டம்

(2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதி)

வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் ஒருங்கிணைந்து, இலங்கையில் கண்டல்/சதுப்புநிலச் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் செயலமர்வுடன் கண்டல் விசேட தாவரங்களை நிகழ்ச்சித் திட்டம் இனங்காணுதல் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக வெளிக்கள நிகழ்ச்சித் திட்டமொன்று 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆம் திகதி மெடில்ல ரெகவ ஏரிக்கு அண்மித்த பிரதேசத்தில் நடாத்தப்பட்டது.

நீல வானத்திற்கான தூய வளி தொடர்பான முதலாவது சர்வதேச தினத்தைக் கொண்டாடுதல்

(2020 செப்டெம்பர் 07)

சுகாதார வளமான உலகத்துக்கான சுகாதார வளமிக்க வளி" என்ற தொனிப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு நீல வானத்திற்கான தூய வளி தொடர்பான இரண்டாவது சர்வதேச தினம் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி சுற்றாடல் தொடர்பான இரண்டாவது சர்வதேச தினம். கௌரவ சுற'றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களின் தலைமையில் செயலாளர் திரு. அணில் ஜாசிங்ஹ அவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு இணையாக வளிதர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பாக டெய்லி மிரார் செய்திப் பத்திரிகை மேலதிக இதழொன்றை வெளியிட்டுபொது மக்களை அறிவூட்டப்பட்டவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

சர்வதேச ஓசோன் தினம்

(2021 செப்டெம்பர 16)

" மொன்ட்ரியல் உடன்படிக்கை": எமது உணவு மற்றும் தடுப்பூசிகளின் குளிர்ச்சி என்ற உலக தொனிப்பொருளினை முதன்மையாகக் கொண்டு கௌரவ. சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களின் தலைமையில் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அணில் ஜாசிங்க அவர்களின் பங்கேற்புடன் சூம் தொழிநுட்பத்தினூடாக இணையவழியூடாக நடாத்தப்பட்டது

உணவு வீண் விரையம் மற்றும் உணவுக் கழிவுகளைக் குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வூட்டும் சர்வதேச தின நிகழ்ச்சித்திட்டம்

(2021 செப்டம்பர் 29)

இந்த சர்வதேச தினத்தை நினைவுகூரும் வைபவம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. உணவு வீண் விரையம் மற்றும் உணவுக் கழிவுகளைக் குறைத்தல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் சர்வதேச தினத்தை முன்னிட்டு பத்திரிகை கட்டுரையொன்று பிரசுரிக்கப்பட்டது.

மண் தின ஞாபகார்த்தக் கொண்டாட்டம் - 2021

(2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆம் திகதி)

2021 ஆம் ஆண்டில் உலக மண் தின ஞாபகார்த்தக் கொண்டாட்டம்
உப்புத் தன்மையைக் குறைப்பதன் ஊடாக நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டது. கிரிபத்கொட உடற்பயிற்சி நடைபாதையை அண்மித்தாக குறைப்பயன்பாட்டு
விவசாய நிலங்களில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக சோஜான் மாதிரி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டது.

சர்வதேச மலையக தினக் கொண்டாட்டம்
(2020 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி)

"நிலைபேறான மலையக சுற்றுலா" என்ற தொனிப்பொருளின் கீழ் அறிவார்ந்த உரையாடலொன்று 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி உள்ளவாறான தேசிய தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக ஒளிபரப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2.1.11 ஆறுகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித் திட்டம்"

" ஆறுகளைப் பாது காப்போம்" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள் பிரிவுகள், மாவட்டங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் குறித்த பங்குதாரர்களுக்கிடையில் வினைத்திறனான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முறையான செயற்பாட்டுப் பொறிமுறையொன்றினை தாபிப்பதனூடாகக் குறுகிய காலத்தினுள் நாட்டின் ஆறுகள் முறைமைக்கான சுற்றாடல் மாசடைவதை குறைத்தல் மற்றும் இவ் விடயப்பரப்பில் உள்ள சகல நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் வளங்களைப் பயனுள்ளவாறு முதலீடு செய்தல் மற்றும் பயன்பாட்டுக்காக எடுத்தல் போன்று சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வெளிப்படைத்தன்மையுடனும் வினைத்திறனாகவும் அமுல்படுத்தல்.

ஆறுகளைப் பாதுகாப்போம் அங்குரார்பன தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் - கதிர்காமம் மாணிக்க கங்கையை மையமாகக் கொண்டு அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது 25 விழிப்பூட்டல் அமர்வுகள் நடாத்தப்பட்டன. "ஆறுகளைப் பாதுகாப்போம்" 25 மாவட்டக் குழுக்கள் தாபிக்கப்பட்டன." சுரக்கிமு கங்கா" பிரதேச குழுக்கள் 334 தாபிக்கப்பட்டன " சுரகிமு கங்கா " செயலகம் நிறுவப்பட்டது.

சுரகிமு கங்கா ஆறுகள் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டது. மதிப்பீடு செய்வதற்காக கிடைத்த செயற்றிட்ட முன்மொழிவுகளில் அங்கீகரிக்கப்பட்ட 50 செயற்றிட்டப் பிரேரணைகளுக்கான ஒதுக்கீடுகள் குறித்த மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது





2.1.12. சுவாசம் தரும் மரங்கள் தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்.

சுவாசம் தரும் மரங்கள் தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனராகலை, கொழும்பு, கேகாலை, அம்பாந்தோட்டை, காலி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.



புது வருடத்தைக் கொண்டாடுவதற்காக ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி காலை 6.40 மணிக்கு" நெகத்தட்ட பெலயக்" சுபநேரத்தில் ஒரு மரக்கன்று என்ற தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.



நாடு முழுவதும் 50,000 மரக் கன்றுகளை நடும் (Mee Tree) நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் கௌரவ. சுற்றாடல் அமைச்சரின் தலைமையில் கொழும்புப் பல்கலைக்கழக பட்டதாரிகளின் சங்கம் மற்றும் சுவர்ணவாஹினி ஊடகம் நிறுவனம் என்பனவற்றின் பங்களிப்புடன் 2021.02.12 ஆம் திகதி அம்பாந்தோட்டை வீரவில வாவிக் கரையில் நடாத்தப்பட்டது.
இதன் போது 300 கன்றுகள் நடப்பட்டன.

சாரணர் பிள்ளைகளின் ஊடாக 100,000 மரக்கன்றுகளை பயிரிடும் ஆரம்ப வைபவம் கௌரவ. சுற்றாடல் அமைச்சரின் தலைமையில் இலங்கை சாரணர் சங்கப்



பிரதான ஆணையாளர் மற்றும் ஹோமாகம மாவட்டத்தின் மாவட்ட ஆணையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் சுற்றாடல் அமைச்சில் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்றது.

2021. வெசாக் தினத்தை முன்னிட்டு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 5000 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

2021.10.24 ஆம் திகதி காலி கோணாபீனுவல பிரதேசத்தில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளல்.

2021.12.05 ஆம் திகதி கேகாலை மாவட்டத்தில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளல்.



பசுமைத் தொழில் முயற்சிகளை மேம்படுத்தல் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 650 நாற்றுமேடைகள் அமைக்கும் நிகழ்ச்சித் திட்டம்.



அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டதோடு அந்த விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 17 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 331 விண்ணப்பதாரர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டது.

2.1.13 நிறுவன அலுவல்கள்

சேவை நிரந்தரமாக்கல்

அரச முகாமைத்துவ சேவை	04
இணைந்த சாரதிகள் சேவை	02
அலுவலக கனிட்ட ஊழியர் சேவை	02

பதவி உயர்வுகள்

நாடளாவிய சேவைகள்	06
அரச முகாமைத்துவ சேவை	03
இணைந்த சாரதிகள் சேவை	01
அலுவலக கனிட்ட ஊழியர் சேவை	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	14

ஓய்வு பெறல்

அலுவலக கனிட்ட ஊழியர் சேவை	01

கேட்டு பதவிவிலகல்

பட்டதாரிப் பயிலுநர்	01

கடன் வழங்கல்

இடர் கடன்	88
ஆதனக் கடன்	05
அடையாள அட்டைகளைத் தயாரித்தல்	**35**
பாராளுமன்ற வினாக்களுக்கு விடைகளைச் சமர்ப்பித்தல்	**13**
ஆண்டறிக்கைகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் ஆகியவற்றைப் பாராளுமன்றத்திற்கு	**01**
சலுகை அடிப்படையில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்	**10**
அமைச்சரவைப் பத்திரங்கள்	**31**

2.1.14 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடையநிறுவனங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டை ஒழுங்குமுறையாக பலப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்கமைய 11 உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 09 கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 02 கணக்காய்வு பரிசோதனைகளுக்காக கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்படவுள்ளது. கணக்காய்வுத் திட்டத்திற்குப் புறம்பாக இரண்டு விசேட விசாரணைகள் நடாத்தப்பட்டன.
உரிய பங்குதாரத் தரப்பினரின் பங்குபற்றுதலுடன் காலாண்டு அடிப்டைக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

2021.04.05 - வருடத்தின் முதலாவது கணக்காய்வு

2021.12.02 - வருடத்தின் இரண்டாவது கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்.

2.1.15 சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள், மேன்முறையீடுகள் மற்றும் ஊடக அறிக்கைகள்

அறிக்கையிடல் காலப்பகுதியுடன் தொடர்புடையதாக ரூபவாஹினி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்பட்ட சுற்றாடல் பிரச்சினைகள்/ அவதானிப்புக்கள் கண்காணிக்கப்பட்டு சூழலுடன் தொடர்புடைய 55 பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்பட்டன. மேலும், செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட சுற்றாடல் உணர்திறன் தலைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி 15. பிரச்சினைகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசாரணை நடவடிக்கைகளுக்காக 1,688 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு 1,449 முறைப்பாடுகளுக்கான அறிக்கைகள் அழைக்கப்பட்டுள்ளதோடு, 875 பதில்கள் கிடைத்துள்ளன மற்றும் 15 விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் சுரங்கம் மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் கீழான மேன்முறையீடுகள் முறையே 58 மற்றும் 39 கிடைக்கப் பெற்றுள்ளன.

2.1.16 சட்ட அலுவல்கள்


அமைச்சுக்குரிய வழக்குகள்/ மனித உரிமை மனுக்களுக்குரிய நடவடிக்கைகளுக்கு உதவிபுரிதல்	85
சட்ட வரைஞர் மற்றும் சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய சட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்கு உதவுதல் (வர்த்தமானி, சட்டங்கள் ற்றும் ஒழுங்கு	06
ஒப்பந்தங்களைத் தயாரித்தல்/பரீட்சித்தல்	42
பொதுமக்களின் முறைப்பாடுகள் சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளல்	07

2.2. சுற்றாடல் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம்.

2.2.1. சுற்றாடல் உணர் திறன்மிக்க இடங்களில் (ESA) உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமைச் சேவைகள் பராமரிப்புச் செயற்றிட்டம்

சுற்றாடல் அமைச்சின் ஐந்து வருடத் திட்டமொன்றின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றாடல் உணர்திறன்மிக்க நிலப் பிரதேசங்களில் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமை சேவைப் பராமரிப்புக் **(ESA)** கருத்திட்டத்திற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) உதவி கிடைக்கப் பெறுவதோடு, உலக சுற்றாடல் வசதிகள் (GEF) மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்றது.

உயிரியல் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற



அச்சுறுத்தல்களைக் குறைத்துக் கொள்வதற்காக, உயிரியல் பாதுகாப்பு முக்கியத்துவம் கொண்ட சுற்றாடல்உணர்திறன் மிக்க நிலப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட ஒதுக்குப் பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களுக்குப் புறம்பாக அதற்குவெளியே காணப்படுகின்ற சுற்றாடல் முறைமை சேவைகள் மற்றும் உயிரியற் பல்வகைமை அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் உணர்திறன்மிக்க வலயங்களை இனங்கண்டு உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட காணிப் பயன்பாட்டுத் திட்ட முறையொன்றின் மூலம் சுற்றாடல் முறைமை முகாமைத்துவத்தை அபிவிருத்தியுடன் பின்தொடரச் செய்தல் இந்தக் கருத்திட்டதின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சுற்றாடல் முறைமை முகாமைத்துவத்துடன் அபிவிருத்தியை பின் தொடரச்செய்தல் மூலம் இலங்கையில் நீண்ட கால பேண்தகு அபிவிருத்தியை உறுதி செய்து கொள்வதற்கு இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக பிரதானமான அடிப்படைகள் செய்து கொடுக்கப்படுகின்றன . அவ்வாறே இந்தக் கருத்திட்டத்தின் அனுபவங்களை இலங்கையில் ஏனைய சுற்றாடல் உணர் திறன்மிக்க வலயங்களுக்காக எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

பெறுபேறு 1: சுற்றாடல் உணர் திறன்மிக்க பிரதேசங்களின் முகாமைத்துவத்திற்காக நிறுவன மற்றும் சட்டரீதியான சட்டகமொன்றை ஏற்படுத்தல் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல்

பெறுபேறு 2: கலா ஓயா ஆற்றுப் பள்ளத்தாக்கில் சுற்றாடல் உணர்திறன் கொண்ட வலயங்களில் உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல்.

2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.

சுற்றாடல் உணர் திறன் கொண்ட நிலங்களின் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் மூலோபாயத் திட்டங்கள் தயாரிக்கபட்டு பொது மக்களின் கருத்துக்களும் சேர்க்கப்பட்டு செல்லுபடியானதாக ஆக்கப்பட்டு அமைச்சரவை அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 02 மாவட்ட வசதிகள் குழுக்கள்மற்றும் 02 பிரதேச முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தப்பட்டன.

புத்தளம் எழுவன்குளம் கிராமத்தில் இணைந்த மேற்பார்வை நிலையமொன்றைத் தாபித்தல் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

ஐந்து (5) மரக்கன்று நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டன் (வில்லு வகை இயறகைத் தாவர வகை)









ESA3 வனங்களுக்கான முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.


1 கங்கே - வாடிய

2 மானேவ கந்த

3 கலாஓயா
(வல்லுவேகம)







இலங்கை முழுவதும் உள்ள சுற்றாடல் உணர்திறன் வலயங்களிலுள்ள பங்குதாரர் நிறுவனங்கள் வசமுள்ளதரவுகளை அடிப்படையாக்கிக்கொண்டு இனங்காணுதல் தொடர்பான தேசிய அளவீட்டுத் திட்டம் (National Scale up plan) தயாரிக்கப்பட்டு செல்லுபடியானதாக்கப்பட்டுள்ளது இணையத்தளத்தை உருவாக்குதல், காணி பயன்பாட்டு திட்டமிடல் திணைக்களத்தின் அலுவலர்களைப் பயிற்றுவித்தல், சமூக அடிப்படையிலான அமைப்புகள் (CBO) தாபிக்கப்பட்டு பயிற்சிகளை ஆரம்பித்து சமூக தொழில் முயற்சியாண்மைகளை ஆரம்பிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கல் மற்றும் 20 நாள் சுற்றாடல் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டம் கங்கே வாடியவில் நடாத்தப்பட்டன.







2.2.2.பொலிகலொரினேடட் பயிபினயில் கழிவுகள் மற்றும் பொலிக்லொரினேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்கள் ஆகியவற்றைச் சுற்றாடல் நட்புறவான விதத்தில் முகாமைத்துவம் மற்றும் வெளியேற்றல் கருத்திட்டம்.

இந்த கருத்திட்டத்தின் நோக்கம் மின்சார ரான்ஸ்போமர் மற்றும் வேல்டிங் (ஒட்டு) ரான்ஸ்போமர்களின் PCB அடங்கிய எண்ணை கொண்ட ரான்ஸ்போமர்களை இனங்கண்டு அதில் உள்ள ரான்ஸ்போமர் எண்ணை மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரான்ஸ்போமர்களை சுற்றாடல் பாதுகாப்பானவாறு வெளியேற்றுதல் ஆகும்.

வேல்டிங் பிரிவின் இன்வென்றி (பொருட் பதிவேடு) தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு ரான்ஸ்போமர் எண்ணை மாதிரிகள், சோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. PCB கொண்ட எண்ணைக்குப் பதிலாக சுத்தமான எண்ணையை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மின்சக்திப் பிரிவின் PCB ரான்ஸ்போமர்கள் இன்வென்றி (பொருட் பதிNவு) தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2021/09/15 ஆம் திகதிய 21/1573/321/018 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அகற்றுகை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்காக அமைச்சின் பகுதியான ரூபா. 68 மில்லியன் இலங்கை மின்சார சபை சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் ஒட்டுதல் பிரிவுகளுக்காக PCB பயிற்சி மற்றும் இன்வென்டறி கைநூல் தயாரிக்கப்பட்டது.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற் பயிற்சி நிறுவனங்களின் உயோகத்திற்காக நீண்டகாலம் காணப்படுகின்ற உயிரியல் சேகரிப்பு மற்றும் நச்சு இரசாயனங்கள் (PBT) பற்றிய கையேடொன்று தயாரிக்கப்பட்டது.

தேசிய இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவக் கொள்கையைத் தயாரித்தல்.

தற்போது இரசாயன முகாமைத்துவக் கொள்கைகள் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. கொள்கைக்காக பொது மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு அவை உட்சேர்க்கப்பட்டன. கொள்கையைப் பூரணப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதோடு இதனை அமைச்சரவை அனுமதிக்காகச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2.3 மினமாட்டா உடன்படிக்கையின் கீழ் " இரசம் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை " தொடர்பான கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் மூலம் சுகாதார, தொழிநுட்ப மற்றும் கல்வித் துறைகளில் பாதரசம் உபயேகித்தல் பற்றி நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றின் மூலம் ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மினமாடா பூர்வாங்க மதிப்பீட்டுச் செயற்றிட்டம் (இரண்டாம் கட்டம்)

தங்க ஆபரணப் பொருட்களைத் தயாரிக்கின்ற சிறிய அளவிலான வியாபாரிகள் தொடர்பான ஆய்வுக்காக இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு தற்போது கொழும்பு,கம்பஹா,கண்டி,பதுளை,காலி, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கணக்கெடுப்புப் பணிகள்நிறைவு செய்யப்பட்டுள்ளன.

சிறிய அளவிலான தங்க ஆபரணத் தயாரிப்பாளர்களுக்காக இரசமற்ற மாற்றீடுதொடர்பான ஆய்வி கூடப்பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது. ஒரு மாற்றுப் பரிசீலனை முடிவுறுத்தப்பட்டுள்ளது. சிறியளவிலான ஆபரண உற்பத்தியாளர்களின் மனிதத்தோல்/ உறுப்புக்களில் இரசம் படிதல் தொடர்பாக ஆராய்ந்து அதன் தாக்கத்தினை அடையாளங் காணுதல் (Bio- monitoring) தொடர்பாக பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.2.4 உலக சுற்றாடல் வசதிகளின் கீழுள்ள ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான உடன்படிக்கைக்குரிய தேசிய அறிக்கையிடல் செயற்பாடுகள்.

இவ் அறிக்கையிடல் செயற்றிட்டத்தின் மூலம் ஐக்கிய நாடுகளின் பாலைவனமாதல் தடுப்பதற்கான உடன்படிக்கையில் அறிக்கையிடல் செயற்பாடுகளுக்காக தேசிய மட்டத்தில் தரவுகளைப் பரிமாறிக் கொள்ளவதற்கான பின்னணி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த பணிகளுக்காக நிலம் சார்ந்த தரவுகள் சேகரிக்கப்படுவதோடு அரச மற்றும் அரச சார்பற்ற பல்வேறு நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த அறிக்கையிடலுக்கு .மண் உயிரியல் காபன், புவி உற்பத்தித்திறன், மற்றும் நிலப் பாதுகாப்பு போன்ற மூன்று பிரிவுகளின் கீழ் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மண் அறிவியல் கல்விப்பிரிவு மண் காபன் தரவு அறிக்கையிடல் செயற்றிட்டத்திற்காக ஏற்கவே நாடு தழுவிய வித்தில் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றது. மண் உயிரியல் கபான் தரவு மாதிரிகள் சேகரித்தல் தற்போது நாட்டின் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலத்தின் உற்பத்தித் திறன் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைச் சேவைக்காக பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அதற்கு ஆரம்ப கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நில உள்ளடக்கத் தரவுகளை நிதிக் கொடுப்பனவுகள் இன்றி பெற்றுக்கொடுக்க முடியும். என நிலப்பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

தரவு வலையமைப்பொன்றை நிறுவுவதற்காக இணைய முறை மூலமாக மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாடல் மற்றும் அதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையிடல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற நில வளங்கள் பிரிவின் ஆற்றல் அபிவிருத்திக்கான தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வகின்றன.

புவியியல் விளைதிறன் தரவுகளை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைச் சேவையின் பொருட்டு இரண்டாவது கொடுப்பனவு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிக்கையிடல் தரவு முறைமைக்கு உட்படுத்தி தரவு முறைமையை ஏற்படுத்துவதற்கான பணிக்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்துடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அறிக்கையிடல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்ற நில வளங்கள் பிரிவின் கொள்ளளவை அதிகரிப்பதற்காகத் தொழில்நுட்ப உபகரணங்கள் (மடிக்கணனி (லெப்டெப்), டொஸ்க்டெப், கணனி மற்றும் அச்சிடல் உபகரணங்கள்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

2.2.5 . மத்திய மத்திய மலை நாட்டில் மண்ணரிப்புக்கு உட்பட்ட விவசாய நிலங்களைப் புனரமைக்கும் செயற்றிட்டம்

இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் கண்டி, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மண்ணரிப்புக்கு உட்பட்ட விவசாய நிலங்களைப் புனரமைப்புச் செய்வதாகும்.

தற்போதுள்ள பேண்தகு காணி முகாமைத்துவத்துடன் (SLM) தொடர்புடைய கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டதோடு, (SLM நியமங்களிற்கு இணங்குதல் தொடர்பிலான பரிந்துரைகளைத் தயாரித்தல் 15 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் நிறைவு செய்யபட்டது .

விளைதிறனான உரப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான மூலோபாயமொன்றைத் தயாரிப்பது இதன் ஒரு பரிந்துரையாகும் என்பதோடு கருத்திட்டத்தின் மூலம் அந்தப் பகுதிகளுக்கு விசேட உரம் பிரயோகிப்பதை மேம்படுத்தல் மற்றும் வெளிக்கள மட்டச் சவால்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஆய்வொன்று என்பன மேற்கொள்ளப்பட்டன.

விவசாய வெளிக்களப் பாடசாலைகளின் (FFS) மூலமான நிலையான காணி முகாமைத்துவத்தை (SLM) மேம்படுத்தல்.

தோட்டப் பயிர்ச்செய்கை, விதை கிழங்குபட பயிர்ச்செய்கை, ஜி..பிஏ (GAP) சான்றுறுதிப்படுத்தப்பட்ட மரக்கறி மற்றும் சிறு தேயிலைத் தோட்ட உற்பத்தி என்பன உள்ளிட்ட பல்வேறு விவசாய முறைகளுக்காக பேண்தகு காணி முகாமைத்துவத்தில் (எஸ்.எல்.எம்.) எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதுதொடர்பாக பிரதேச விவசாயத் திணைக்களம்,

விவசாய அபிவிருத்தித் திணைக்களம், பிரதேச செயலாளர் மற்றும் சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் எப்.எப்.எஸ். (FFS) முறை தொடர்பில் நிகழ்ச்சித்திட்டங்கள் மேறகொள்ளப்பட்டன. FFS எப். எப்.எஸ் முறைமை தொடர்பாக சகல பங்குதார நிறுவனங்களின் விக்கள அலுவலர்கள் மற்றும் வசதி வழங்குநர்கள் 128பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பயிற்சியினை பெற்றுக் கொண்ட வசதி வழங்குநர்களின் ஒத்துழைப்புடன் இத்துறையில் எப்.எப்.எஸ் (FFS) செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் இதன் மூலம் 1730 விவசாயிகள் நேரடியாக நன்மையடைந்தனர்.

செயற்றிட்டத்தினால் வெளிப்பாட்டு இடங்களின் நிர்மாணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட நுண் நீர் மாதிரிகளில் தனியான நிலப்பரப்பு துறைகள் 120 உம், அரச நிறுவனங்களுக்கு உரித்தான பொதுத் துறைகள் 04 உம் அவற்றுல் காணப்படுகின்றன. அவையாவன, பிந்துனுவெவ சேவை ஒருங்கிணைப்பு பயிற்சி நிலையம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் குண்டசாலையில் உள்ள பயிற்சி நிலையம், பசறை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சூரியகொட சிறு தேயிலை தோட்ட அதிகார சபையின் பயிற்சி நிலையமாகும். 10,000 இற்கு மேற்பட்ட விவசாயிகள் இந்த வெளிப்பாட்டு இடங்கள் ஊடாக அறிவு மற்றும் பயிற்சி பெற்று நன்மைடைந்துள்ளனர்.

.தேசிய மட்டத்திலான தகவல் பரிமாற்றங்கள் தளம், அதாவது இலங்கையின் பாதுகாப்பு அணுகுமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களை மீளாய்வு செய்தல்- SriCAT சுற்றாடல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தாபிக்கப்பட்டது. இது தேசிய மட்ட தகவல் பரிமாற்றத் தளமாக அதனை மேலும் மேம்படுத்தல்.பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மண் விஞ்ஞானத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும்.

விவசாயத்துறையின் விரிவாக்கத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகப் பயன்பாட்டை நவீன அணுகுமுறையொன்றாக மேம்படுத்தல்.

இச்செயற்றிட்டத்தின் மூலம் Zoom தொழில்நுட்பத்தினூடாக இணைய கொள்திறனை மேம்படுத்தல், அறிக்கையிடல் காணொளிப்படங்கள் மூலம் கற்றல் மற்றும் பிராந்திய ஊடகங்களின் பயன்பாடு உள்ளடங்கலாக. பல்வேறான மாற்று அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பரிசீலிதுப் பார்க்கப்பட்ட போதிலும் விவசயிகளிடத்தில் அறிமுகம் செய்யப்பட்ட வட்ஸ்எப் குழுவினூடாக தகவல் தொழிநுட்பத்தை அடிப்டையாக்க் கொண்ட தொழிநுட்ப பரவலை அறிமுகப்படுத்தும் முயற்சி வெற்றிகரமாக நிறைவடைந்தது.

விதை கிழங்கி எப்.எப்.எஸ் -FFS - WhatsApp குழு 13 விவசாயிகள் 87



GAP சான்றிதழ்கள் எப்.எப்.எஸ் - FFS – WhatsApp குழு 12 விவசாயிகள் 113

தோட்டப் பயிர்ச் செய்கை FFS – WhatsApp குழுக்கள் 60 - விவசாயிகள் 846

2.2.6. இலங்கையில் மொன்ரியல் அமைப்பின் ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

இலங்கை மொன்ரியல் அமைப்பின் கொள்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஓசோன் படை சேதமடைவதைத் தவிர்ப்பதற்காக மிக விசேடமான பங்களிப்பை வழங்கியதோடு 2016 ஆம் ஆண்டில் கிலாலி திருத்தத்திற்கு இனங்கியதைத் தொடர்ந்து உலக வாயுக்கோளத்pன் வெப்பம் அதிகரிப்பதை தடுப்பதற்காக விசேட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டன.

- 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் பதிவு செய்யப்பட்ட 16 நிறுவனங்களுக்காக HCFC 156.059 மெற்றிக் தொன்களை இறக்குமதி செய்வதற்காக (கோட்டா) அமதிப்பங்கு விநியோகிக்கப்பட்டதோடு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் தேசிய ஓசோன் பிரிவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப HCFC குளிரூட்டிகளை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

- HFC இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டு தொடக்கம் கோட்டா வழங்கலின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

- ஓசோன் படை சேதமடைதல் பொருட்கள் நுகர்வுத் தரவுகள் இலங்கை சுங்கம் மற்றும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தரவுகள் பகுப்பாய்வு.செய்யப்பட்டதைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் குறித்த நிறுவனங்களுக்கு அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டது.

- தொழில்நுட்பவியலாளர்களின் சேவையினை தரமுயர்த்துவதற்காக குளிர்சானப் பெட்டிகள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரத்தைப் பழுதுபார்த்தல் சூழல் நட்புறவான தொழில் நுட்பங்கள் தொடர்பான பயிற்சி. வழங்கியதன் பின்னர் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் அவர்களுக்காக Recognition for Prior Learning (RPL) என அழைக்கப்படுகின்ற சான்றிதழ் வழங்குவதற்காக தேசிய ஓசோன் பிரிவு ஒத்துழைப்பு வழங்குகின்றது. இந்த வருடத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு பயிற்றப்படாத 40 தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- சுற்றாடலுக்கு விடப்படுகின்ற குளிர்பதன வெளியீட்டை குறைப்பதற்காக உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கல் மொனராகலை, மிரிஜ்ஜவில, ஹேனகடுவ, பெல்பொத்த , கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் பெலியத்த, கிளிநொச்சியிலுள்ள கைத்தொழில் கல்வி நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

- ஓசோன் அழிவு இரசாயனங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத்துடன் இணைந்து இணைய வலையமைப்பு தன்னியக்க கண்காணிப்பு முறைமையொன்றை நிறுவுதல் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டது.

- மாற்று குளிர்சாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதற்காக சர்வதேச தரங்களுக்கு அமைவாக இலங்கை தர நிர்ணயங்களை (SLS) அறிமுகம் செய்வதற்காக தொழில்நுட்பக் குழுவொன்று நியமனம்செய்யப்பட்டது.

- இலங்கைக்கான தேசிய குளிர்வித்தல் கொள்கை தயாரித்தல் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக்கான" தேசிய குளிரூட்டல் அமுலாக்கல் திட்டம்" ("National Cooling Action Plan") என்பது குளிரூட்டல் துறையுடன் தொடர்புடைய அனைத்து பிரிவுகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் இலங்கையில் குளிர்வித்தல் சக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தக் கூடிய மூலோபாயத் திட்டம் ஒன்றாகும். இந்த பரிந்துரைக்கப்பட்ட திட்டம் 2021 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது."

- சுற்றாடல் நேயமுள்ள வளிச்சீராக்கி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஊக்குவிப்புப் படிகள் அத்தகைய 46 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

- ஓசோன் தினத்திற்குச் சமாந்தரமாகப் விதைப் பயிர்ச் செய்கையினை விரிவாக்குவதற்காக "Throw & Grow" என்ற எண்ணக்கரு அறிமுகம் செய்யப்பட்டது. விதைப் விசிறல் என்பது தாவரங்கள் மற்றும் காடுகளை வளர்ப்பதற்கும் மற்றும் அழிவடைந்த காணிகளைத் மீளத் தாபிப்பிப்பதற்கும் உதவும் உள்ளூர் முறையாகும். ·

- தேசிய ஓசோன் பிரிவு தனது பங்காளர்களிடையே 100,000 விதைகளை விநியோகிப்பதன் ஊடாக காபன் நடுநிலையாக்கத்திற்காக இலங்கை எடுக்கும் முயற்சிக்கு பங்களிப்பு செய்யத் தீர்மானித்துள்ளது.



2.2.7. காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கான பங்குடமைக் கருத்திட்டம்.

காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான பங்குடமைக் கருத்திட்டம் சந்தையின் தயார் நிலைக்கான பங்குடமை மூலம் உதவி வழங்கப்படுகின்ற ஒரு கருத்துட்டம் என்பதோடு இது பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கான காபன் விலையிடல் உபகரணம் உள்ளிட்ட
காலநிலை மாற்றக் குறைப்புக்கான கொள்கை தயார் செய்து செயற்படுதுகின்ற நாடுகளுக்கு உதவி வழங்குகின்ற உலக வங்கியினால் கட்டுப்படுத்தப்படுகின்ற
பல் தரப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகும். இச்செயற்றிட்டம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு இது 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பூரணப்படுத்தப்பட்டது.

இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கம்·

காபன் விலையிடல் உபகரணங்களை இனங்காணுதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைத்து காலநிலை மாற்றங்களின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கான தேசிய பங்களிப்பின் (NDCs) கீழான இலக்கை அடைதல். ·

அளத்தல், அறிக்கையிடல் மற்றும் உறுதிப்படுத்தல் (MRV) முறைமை மற்றும் காபன் வரவு முறைமை மற்றும் காபன் பதிவு இடாப்பு போன்ற புதிய பொறிமுறைகளை தாபிப்பதன் மூலம் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை பொருண்மைப்படுத்தல் மற்றும் விற்பனை செய்த/மீதமான காபன்களிலிருந்து வருமானம் பெறுவதற்கு உதவுகின்றது,

(RETF) நிதியத்தினூடான செயற்றிட்டங்கள் மூலம் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்

மேற்பார்வை, அறிகையிடல்; மற்றும் மெய்ப்பித்தல் (MRV), இலங்கை காபன் பதிவு (SLCR), இலங்கை காபன் வரவு முறைமை (SLCCS) மற்றும் காபன் விலையிடல் உபகரணங்களைச் (CPIs) செயற்படுத்துவதற்கு உகந்த கொள்கைத் .தொகுதியொன்றை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துவதற்கான கொள்கை இணக்கப்பாடு மற்றும் சிபாரிசுகளை மதிப்பீடு செய்தல்.

தேசிய காலநிலை மாற்றத் தரவுப் பரிமாற்றல் வலைப்பின்னல் முறைமையை தயாரித்தல் ·

புதிய கார்பன் வுலையிடல் உபகரணமாக (CPIs) வெளியிடல் வியாபார முறைமையினை (ETS) நடைமுறைப்படுத்துவதற்காக வழிகாட்டல் வரைபடமொன்றைத் தயாரித்தல்

உலக வங்கியினால் PMR நாடுகளுக்கு வழங்கப்பட்ட முறைமை மற்றும் பதிவு முறைமையை இலங்கைக்குப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதனை தேசிய தேவைகளுக்கேற்பத் தயாரித்தல்

காலநிலை மாற்றங்களினைக் குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வு காணொளி மற்றும் விவரண நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

(RETF) நிதியத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளாவன:

இலங்கையின் மின்சாரம் மற்றும் போக்குவரத்துத் துறைகளைக் காபனேற்றம் செய்யும் போது காபன் விலையிடல் உபகரணங்களின் (CPI) பணிப்பொறுப்பை ஆய்வு செய்வதற்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல்.

அளவிடல், அறிக்கையிடல் மற்றும் உறுதிப்படுத்தல் (MRV), இலங்கை காபன் பதிவு (SLCR) அபிவிருத்திக்குத் தேவையான மதிப்பீடு,தொழிநுட்ப மற்றும் அமுலாக்க விபரக்குறிப்பறிக்கை தயாரித்தல்.

இலங்கைக்கான காபன் வரவு செயற்றிட்டத்தினை (SLCCS) நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய மட்டத்திலான வழங்கல் மற்றும் கேள்வி மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்தல் " மாகாண மட்டத்திலான வழங்கல் " கேள்வி மதிப்பீட்டு தாபன, சட்டம் மற்றும் முறைகள் தேவையான மதிப்பீட்டை தயாரித்தல்.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான அகராதி
காலநிலை மாற்ற செயலகத்தால் '" காலநிலை தொடர்பான அகராதி " தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2.2.8 இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் பயன்பாட்டின் பின்னர் வீசப்படுகின்ற விவசாய இரசாயனப் பொதிகளை மீள்சுழற்சி செய்தல் கருத்திட்டம்.

இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பயன்படுத்தப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்கள் பொதிகள், கொள்கலன்கள் ஆகியவற்றை சேகரித்தல் மற்றும் மீள்சுழற்சி செய்வதாகும் . அதன் மூலம் "பேண்தகு சுற்றாடல் முகாமைத்துவம் "தொடர்பாக அறிவுறுத்தல் மற்றும் வெற்று விவசாய இரசாயப் பொதிகள் மற்றும் கொள்கலன்களை சேகரிகும் வாரம் பிரகடனப்படுத்தப்படும் .

வடமத்திய மாகாணத்தில் வெற்று கிளாஸ் மற்றும் பிரிஸ்டிக் கொள்கலன்களை சேகரிப்பதற்கதாக விவசாய அமைச்சுடன் இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்று பொலன்னறுவையில் நடாத்தப்பட்டது.

2.2.9 இலங்கையில் நிலைபேறானதும் வினைத்திறனானதுமான மின்சார இடப்பெயர்வு முறையை)Electric Mobility) மேம்படுத்தல் தொடர்பான செயற்றிட்ட முன்மொழிவைத் தயாரித்தல்.

இலங்கையில் மின்சார இடப்பெயர்வை மேம்படுத்தும் நோக்கில் உலகலாவிய சுற்றாடல் வசதியளிப்புக்கான (GEF) நிதி உதவிக்கான செயற்றிட்ட எண்ணக்கரு தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதோடு இது GEF இன் நிறுவனத்தால் அங்கீக்கப்பட்டுள்ளது. அதன்படி, நகர் பிரதேச வளி மாசடைதலைக் குறைத்தல் மற்றும் போக்குவரத்து பிரிவின் பசுமையாக்கத்தை அதிகரிப்பதற்காக மின்சார இடப்பெயர்வு மேம்படுத்தல் தொடர்பாக விரிவான முன்மொழிவு ஒன்று சமர்ப்பித்தல் தேவைப்படுவதுடன் இச்செயற்றிட்டத்தின் மூலம் இலங்கையில் பொதுப் போக்குவரத்துச் சேவையை இலத்திரனியல் தொழில்நுட்பத்திற்கு மாற்றுவதற்கான கொள்கைகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

போக்குவரத்து, மின்சாரம், சக்தி, கைத்தொழில் மற்றும் நிதி போன்ற சுற்றாடல் விடயங்களுக்குப் பொறுப்பான (பங்குதாரர்) அமைச்சுக்களைக் கொண்ட அலுவலர் குழுவொன்று மற்றும் நிபுணத்துவக் குழுவொன்றின் உதவியுடன் இலத்திரனியல் இடப்பெயர்வு அபிவிருத்திக்கான வழிகாட்டல் வரைபடமொன்றைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சுற்றாடல் அமைச்சு முன்னின்று நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. 2021 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் இந்த திட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2.2.10 இலங்கையின் வளித் தரத்தைப் பேணுதகு நிலையாக்கல் : கொவிட்- 19 காலப்பகுதியின் போது செயற்படுத்துவதற்கான . 25 படி முறைகள் கொண்ட செயற்றிட்டம்

மேற்படி செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் யுஎன்.டி.பி. (UNEP) மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றுக்கிடையிலான சிறிய அளவிலான நிதி உடன்படிக்கையொன்று (SSFA) கைச்சாத்திடப்பட்டது. சகலருக்கும் நீல வானம்கொண்ட தூய வளிகொண்ட வளமானசிறந்த எதிர்காலமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக நகரங்களில் பலப்படுத்தப்பட்ட தூய வளித் தீர்வுகளின் வெளிப்பாட்டை அதிகரிப்பது இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் மூலம் 2018 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வலயத்தில் வளி மாசடைதல் நிகழ்ச்சித்திட்டம்: விஞ்ஞானத்தினை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள் பற்றிய அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட 25 துறைகளினூடாக வளியின் தரத்தை மேம்படுத்துவதற்காக பிரதான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டிய துறைகளை இனங்காணும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2.11 சமூக அடிப்படைச் சூழல் அணுகுமுறை மூலம் வனங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியன ஒருங்கிணைந்த முகாமைத்துவச் செயற்றிட்டம்.

இந்த செயற்றிட்டத்தின் நோக்கம் இலங்கையின் அனுராதபுரம், மன்னார், வவுனியா புத்தளம், ஆகிய மாவட்டங்களில் மல்வத்து ஓயா படுகைக்கு அருகாமையில் வனங்கள், விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறையின் நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும்துறைசார்ந்த தீர்மானங்களை எடுக்கும் போது அதன் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான திட்டமிடல் உபாயங்களை தழுவல்/அணுகுதல் மூலம் பூகோள ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற உயிரியல் பல்வகைமையைப் பாதுகாப்பதனை பலப்படுத்துவதாகும்

மாவட்டம் மற்றும் பிரதேச மட்டத்தில் அரச மற்றும் சிவில் சமூகத்தினை ஒன்றிணைப்பதன் மூலம் மல்வத்து ஓயா ஆற்றுப் படுகையின் இரண்டு பிரதேசங்களில் (ரிட்டிகல முதல் மிஹிந்தலை வரை மற்றும் யோத வாவி மடுவீதி - வில்பத்து) மற்றும் கடற்கரையோரச் சூழல் (மன்னார் வளைகுடா/ வங்களாய் - அரிப்பு - சிலாவத்துறை) இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் காணி பயன்பாட்டுத் திட்டமிடலின் பேது உயிரியல் பல்வகமைப் பாதுகாப்பை விரிவாக்குவதற்கு இக்கருத்திட்டம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இச்செயற்றிட்டமானது நான்கு பிரதான கூறுகளை உள்ளடக்கியுள்ளது.


முதலாவது ஆக்கூறு:

தீர்மானங்களை எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்காக நிறுவன இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான நிறுவனகொள்திறனைக் கட்டியெழுப்புதல்.

முதலாவது ஆக்கக் கூறின் கீழான முன்னேற்றம்:

1. சுற்றாடல் அமைச்சின் உயிரியல் பல்வகைமைப் பிரிவு, இயற்கை பாதுகாப்பு சர்வதேச சங்கம் (IUCN) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) ஆகியன ஒருங்கிணைந்த செயற்றிட்டத்தின் ஆரம்பச் செயலமர்வு 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 25 ஆம் திகதி நடாத்தப்பட்டது. சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் திரு.அனில் ஜாசிங்க அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களின் அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறையினர் மற்றும் சர்வதேச அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு தரப்பினர்கள் கலந்து கொண்டனர்.

செயலமர்வின் பிரதான நோக்கம்:(அ)செயற்றிட்டக் குறிக்கோள்கள், எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள், வெளியீடுகள், பெறுபேறுகள் மற்றும் தாக்கங்கள் தொடர்பாக குறித்த தரப்பினர்களை அறிவுறுத்துதல்; (ஆ) தற்போதிருக்கின்ற நிலைமைகளின் பிரகாரம் செயற்றிட்ட அடிப்படைச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் செயற்றிட்ட அங்கீகாரம் மற்றும் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் திகதிக்கு இடையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை இற்றைப்படுத்தல் தொடர்பாக முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல்; மற்றும் (இ) சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு, ஆண் பெண் பால்நிலை தொடர்பான செயற்பாடுகளைத் திட்டமிடுதல், அறிகையிடுதல், நிதி வழங்கல் நிபந்தனைகள் போன்றவற்றுக்கிணங்க உலகளாவிய சுற்றாடல் வசதிகள் பற்றிய தேவைப்பாடுகள் தொடர்பாக பங்குதாரர்கள் மற்றும் அமுல்படுத்தும் நிறுவனங்களை அறிவுறுத்துவதாகும்.



2. மாவட்டச் செயலாளர்கள், குறித்த பிரதேச செயலாளர்கள் மற்றும் பங்குதார தரப்பினர்களுக்கு செயற்றிட்டத்தை அறிமுகம் செய்தல் மற்றும் செயற்பாடுகளை அடையாளம் காணல் செயலமர்வொன்று அனுராதபுரத்தில் நடாத்தப்பட்டது. மாவட்ட விவசாயக் குழுவின் உப குழுவொன்றாக செயற்றிட்டத்தின் அலுவல்களை மேற்கொண்டு செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மாவட்டச் செயலாளரினால் விவசாயம் திணைக்களம், வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய அனைத்து பிரதேச செயலாளர்களுடனும் செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவது பொருத்தமானதென முன்மொழியப்பட்டது.

3. முதலாவது செயற்றிட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 2 ஆம் திகதி சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

4. செயற்றிட்டத்தின் இணையத்தளத்தை விருத்தி செய்தல்.

சுற்றாடல் அமைச்சு மற்றும் IUCN செயற்றிட்டப் பணியாட் குழுவிற்கான தொடர்பாடல் மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக இரண்டு வார இணையத்தள அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.

5. சமுதாய அடிப்படையிலான சுற்றாடல் முறைமை அணுகுமுறை பற்றிய செயற்றிட்டம் தொடர்பில் ஊடகப் பயன்பாட்டின் மூலம் மக்களை அறிவுறுத்துதல்.

சமுதாயஞ் சார்ந்த சுற்றாடல் முறைமைக்கான அணுகுமுறை என்பது பொது மக்களிடையே அதிக விழிப்புணர்வு மற்றும் அவர்களது தொழிற்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் செயற்றிட்டச் செயற்பாடுகளில் பங்கேற்பு தேவைப்படுகின்ற புதிய எண்ணக்கரு ஒன்றாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள சேவையின் "மிஹிதலய" வானொலி நிகழ்ச்சியின் மூலம் 2 சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக பொதுமக்களை விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



இரண்டாவது ஆக்கக்கூறு:

உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நிலையான
வாழ்வாதாரத்திற்கான புவியியல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட மூலோபாயத்தைத் தயாரித்தல் மற்றும் நடைமுறையிலுள்ள கொள்கைச் சட்டகத்துடன் அவற்றை ஒருங்கிணைத்தல்.

மூன்றாம் ஆக்கக்கூறு:

பல்வகைமைப் பாதுகாப்பினூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய சமூக- பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பங்கேற்பு காணி பயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஜிவனோபாயங்களை ஏற்படுத்தல்

இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆக்கக்கூறுகளின் முன்னேற்றம்:

•விரிவான உயிரியல் பல்வகைமை மதிப்பீடு

மஹாகனந்தரவ (நிலப்பரப்பு 1) இ மற்றும் தந்திரிமலை (நிலப்பரப்பு 2) இ உயிரியல் பல்வகமை மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு அதன் போது பின்வரும் பிரதான துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள சுற்றாடல் முறைமை.

உள்நாட்டுக்கே உரித்தான மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளான இனங்களின் தற்போதைய நிலைமை மற்றும் அவற்றின் பாதுகாப்பிற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.

பாதுகாப்புப் பிரதேசங்களின் கீழ் உள்ளடக்கப்படாத சுற்றாடல் உணர்வு பூர்வமான /உணர் திறன்'கொண்ட பிரதேசங்களின் நிலைமை.

மூடு தாவர வகைகளின் நிலைமை மற்றும் அவற்றின் கட்டுப்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளும்

செயற்றிட்டத்தினுள் மீளமைப்பு/மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகள்

•மல்வத்து ஓயா ஆற்றுப் படுக்கை சார்ந்த நீர் நிலைமை ஆய்வு

நீரின் தரத் தன்மை தொடர்பில் மனித நடவடிக்கைகள்/ செயற்பாடுகள் பாரியளவில் தாக்கம் செலுத்துகின்றது. சமுதாய அடிப்படைச் சுற்றாடல் முறைமை அணுகுமுறைச் செயற்றிட்டத்தின் மூலம் மல்வத்து ஓயா ஆற்றும் படுக்கை சார்ந்த நீர் நிலைமை ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பல்வேறு அளவுருக்கள்



தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு நீராடுதல், குடிநீர் நடவடிக்கைகள் மற்றும் மீன்பிடித்தல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இடங்கள் ஆகியனவற்றின் நீரின் தரத் தன்மைப் பகுப்பாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **அறிமுகம் செய்தல் காணொளி/ வீடியோ**

சமுதாய அடிப்படையிலான சுற்றாடல் முறைமைக்கான



அணுகுமுறை செயற்றிட்டம் தொடர்பாக விசேடமாக இச் செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்ற பிரதேசங்களில் தொடர்புடைய பங்குதாரத் தரப்பினர் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக ஆவணப்படமொன்றை /வீடியோ ஒன்றை மும்மொழிகளிலும் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நான்காம் ஆக்கக்கூறு:

பின்னாய்வு மற்றும் அறிவின் பரிமாற்றம்

2.2.12 உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டஜீனா உடன்படிக்கைக்கு உட்பட்டதாக தேசிய உயிர்பாதுகாப்பு சட்கத்தை செயற்படுத்தல்

கார்டஜீனா உடன்படிக்கைக்கு உட்பட்டதாக உயிரியல் பாதுகாப்புக்குரிய முன்மாதியை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்காக இலங்கையின் சட்டப்பிண்ணனி, நிறுவன மற்றும் தொழிநுட்ப சாத்தியப்பாட்டை வலுவாக்கம்செய்வது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்

இந்தக் கருத்திட்டம் 4 ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளது

ஆக்கக் கூறு - 1 உயிரியல் பாதுகாப்புக்கான கொள்கைகள், நிறுவன மற்றும் வழிநடாத்தல் சட்டகத்தைப் வலுப்படுத்துதல்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்களால் சுற்றாடல் மற்றும் மனித சுகாதாரம் என்பனவற்றுக்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் அவற்றினைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் உயிரியல் பாதுகாப்புச் சட்ட வரைவை சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆலோசனைக்கமய திருத்தம் செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. · உயிரியல் பாதுகாப்புக்கான பிரதான திட்டம் தயாரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளது·

உயிரியல் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் உயிரியல் பாதுகாப்பு தொடர்பான நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள்.

இலங்கையின் உயிரியல் பாதுகாப்பு தடைநீக்கல் பொறிமுறைமை (BCH) இணையத்தளம் வெளியிடப்பட்டது.

http://lk.biosafetyclearinghouse.net/2



ஆக்கக் கூறு 2 - ஆபத்து மதிப்பீடு, ஆபத்து முகாமைத்துவம் மற்றும் ஆபத்து தொடர்பாடலுக்கான முறைமையை மேம்படுத்தல்.

இதற்காக பின்வரும் வழிகாட்டல்கள் பூரணப்படுத்தப்பட்டன..

ஆய்வுகூடத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்களை பாதுகாப்புக்காகப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்கள் தொடர்பான சுற்றாடல் ஆபத்தை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களை வரையறுக்கப்பட்ட துறைகளில்

பரிசோதித்துப் பார்ப்பதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட தாவரங்களிலிருந்து பெறப்பட்ட உணவுகளின் பாதுகாப்பை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்

மரபணு மாற்றம் செய்யப்பட்ட நுளம்புகளை பரிசீலனை செய்வதற்கான வழிகாட்டல்

நிறுவன உயிரியல் பாதுகாப்பு குழுவுக்கான வழிகாட்டல்

ஆபத்துக்கள் பகுப்பாய்வுச் சட்டகம்

இந்த வழிகாட்டல்கள் தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது

ஆபத்து தொடர்பாடல் வழிமுறைகள் மற்றும் ஆபத்துப் பகுப்பாய்வு தொடர்பான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

ஆக்கக் கூறு 3- மரபணு மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்களைப் (LMOs)/(GMOs) பரீட்சித்தல் மற்றும் இனங்காண்பதற்காக தொழில்நுட்பக் கொள்ளளவை விருத்தி செய்தல்

தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை (NPQS), கைதொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) மற்றும் விவசாய உயிரியல் தொழில்நுட்ப நிலையம் (AgBC) ஆகிய நிலையங்களின் ஆய்வுகூடங்களை மேம்படுத்தல்.

இந்த ஆய்வுகூடங்களின் தரநிர்ணயத்திற்காக இலங்கை தரநிர்ணய சபையுடன் (SLAB) கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இந்த ஆய்வுகூடங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகள் GMO பரிசோதனைக்காக பயிற்றுவிக்கப்பட்டனர்.

மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், பரிசோதனை மற்றும் கண்காணிப்பு தொடர்பான கைநூல்கள் தயாரிக்கப்பட்டதோடு உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பரிசோதகர்கள் , வித்துப் பரிசோதகர்கள், தாவர தனிமைப்படுத்தல் அலுவலர்கள் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட சுங்க அலுவலர்களுக்கு GMO பரிசோதனை செய்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல் பயிற்சியளிக்கப்பட்டது. .

ஆக்கக் கூறு 4 - அறிவு விருத்தி, பொதுமக்களை அறிவூட்டல் செய்தல் மற்றும் கல்வி மற்றும் பங்கேற்பு

• தேசிய உயிரியல் பாதுகாப்புத் தொடர்பாடல் மூலோபாயம் வரைவு செய்யப்பட்டது.

2.3 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம்.

2.3.1 மத்திய சுற்றாடல் அதிகார சபை.

சுற்றாடல் மாசடைதல் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள்.

வளி வெளியேற்றம் மற்றும் கழிவு வெளியேற்றுதல் முகாமைத்துவம்
